ஓம்:

வந்தேமாதரம்.

உதயபாரதி

UDAYA BHARATI.

ஓர் இனிய தமிழ் மாதப் பத்திரிகை.

மலர் க.	1927-ம் ஆண்டு ஏப்ரில் - மேமீ பிரபவ-ஆண்டு சித்திரை - வைகாசிமீ	இதழ் எ - அ.

கீதாஞ்சலி.

மின்னுருவாய் முன்னுருவில் வேத நான்காய்
விளக்கொளியாய் முளைத் தெழுந்த திங்கள் தானாய்
பின்னுருவாய் முன்னுருவில் பிணி மூப்பில்லாப்
பிறப்பிலியா யிறப்பதற்கே யெண்ணாது—எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூத மைந்தாய்ப்
புனலுருவா யனலுருவில் திகழுஞ்சோதி
தன்னுருவா யென்னுருவில் நின்ற வெந்தை
தளிர் புரையும் திருவடி யென் தலை மேலவே.

(திருமங்கையாழ்வார்.)

ஏது மொன்று மறிவில ராயினும்
ஓதியஞ் செழுத்தும் முணர்வார்கட்குப்
பேதமின்றி யவரவ ருள்ளத்தே
மாதுந்தாமு மகிழ்வர் மாற்பேறரே.

அச்சமில்லை நெஞ்சே யரனுமங்கள்
நிச்சலுந் நினைபாய் வினை போயறக்
கச்சமாவிட முண்ட கண்டாவென
வைச்ச மாநிதியாவர் மாற்பேறரே.

(திருநாவுக்கரசு சுவாமிகள்.)

சத்ரபதி சிவாஜி
தன் சைனியத்திற்குக் கூறியது.

(ஸி. சுப்பிரமணிய பாரதியார் பாடியது)

ஜயஜய பவானி! ஜயஜய பாரதம்!
ஜயஜய மாதா! ஜயஜய துர்க்கா!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!
சேனைத் தலைவர்காள்! சிறந்த மந்திரிகாள்!
யானைத் தலைவரும் அருந்திறல் வீரர்காள்!
அதிரத மன்னர்காள்! துரகத் ததிபர்காள்!
எதிரிகள் துணுக்குற இடித்திடு பதாதிகாள்!
வேலெறி படைகாள்! சூலெறி மறவர்காள்!
காலன துருக்கொளும் கணைதுரந் திடுவீர்!
மற்றுமா யிரவிதம் பற்றலர் தம்மைச்
செற்றிடுந் திறனுடைத் தீரத் தினங்காள்!
யாவிரும் வாழிய! யாவிரும் வாழிய!
தேவிநுந் தமக்கெலாம் திருவருள் புரிக!
மாற்றலர் தம்புலை நாற்றமே யறியா
ஆற்றல்கொண் டிருந்ததிவ் வரும்புகழ் நாடு!
வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்
பாதமும் பொறுப்பளோ பாரத தேவி!
வீரரு மவரிசை விரித்திடு புலவரும்
பாரெலாம் பெரும்புகழ் பரப்பிய நாடு!
தர்மமே யுருவமாத் தழைத்தபே ரரசரும்
நிர்மல முனிவரும் நிறைந்த நன்னாடு!
வீரரைப் பெறாத மேன்மைதீர் மங்கையை
ஊரவர் மலடியென் றுரைத்திடு நாடு!
பாரதப் பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வரிந் நினைவகற் றாதீர்!
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வரிந் நினைவகற் றாதீர்!
வானக முட்டு மிமயமால் வரையும்
ஏனைய திசைகளி லிருந்திரைக் கடலும்

காத்திடு நாடு! கங்கையும் சிந்துவும்

தூத்திரை யமுனையுஞ் சுனைகளும் புனல்களும்
இன்னறும் பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு!
பைந்நிறப் பழனம் பசியிலா தளிக்க
மைந்நிற முகில்கள் வழங்கு பொன்னாடு!
தேவர்கள் வாழ்விடந் திறலுயர் முனிவர்
ஆவலோ டடையு மரும்புகழ் நாடு!
ஊனமொன் றறியா ஞானமெய்ப் பூமி!
வானவர் விழையு மாட்சியார் தேயர்!
பாரத நாட்டிசைப் பகரயான் வல்லனோ?

நீரதன் புதல்வரிந் நினைவகற் றுதீர்!
தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்
பேய்த்தகை கொண்டோர் பெருமையும் வன்மையும்
ஞானமு மறியா நவைபுரி பகைவர்
வானக மடக்க வந்திடு மாக்கர்போல்
இந்நாட் படைகொணர்ந் தின்னல் செய்கின்றார்!
ஆலய மழித்தலு மருமறை பழித்தலும்
பாலரை விருத்தரைப் பசுக்களை யொழித்தலும்
மாதர்கற் பழித்தலும் மறையவர் வேள்விக்
கேதமே சூழ்வது மியற்றி நிற்கின்றார்!

சாத்திரத் தொகுதியைத் தாழ்த்திவைக் கின்றார்!
கோத்திர மங்கையர் குலங்கெடுக் கின்றார்!
எண்ணில துணைவர்காள் எமக்கிவர் செயுந்துயர்!
கண்ணிய மறுத்தனர்! ஆண்மையும் கடிந்தனர்!
பொருளினைச் சிதைத்தனர்! மருளினை விதைத்தனர்!
திண்மையை யழித்துப் பெண்மையிங் களித்தனர்!
பாரதப் பெரும்பெயர் பழிப்பெய ராக்கினர்!
சூரர்தம் மக்களை தொழும்பராய்ப் புரிந்தனர்!
வீரிய மழிந்து மேன்மையு மொழிந்துநம்
ஆரியர் புலையர்க் கடிமைக ளாயினர்!

மற்றிதைப் பொறுத்து வாழ்வதோர் வாழ்க்கை?

வெற்றிகொள் புலையர்தாள் வீழ்ந்துகொல் வாழ்வீர்?
மொக்குள்தான் தோன்றி முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம்!
தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பார் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமொன் றிலாது மாற்றலர் தொழும்பாய்
ஈனமுற் றிருக்க எவன்கொலோ விரும்புவன்?
தாய்பிறன் கைப்படச் சகிப்பவ னாகி
(எ௰) நாயென வாழ்வோன் நமரிலிங் குளனோ?

பிச்சைவாழ் வுகந்து பிறருடை யாட்சியில்
அச்சமுற் றிருப்போன் ஆரிய னல்லன்!
புன்புலால் யாக்கையைப் போற்றியே தாய்நாட்
டன்பிலா திருப்போன் ஆரிய னல்லன்!
மாட்சிதீர் மிலேச்சர் மனப்படியாளும்
ஆட்சியி லடங்குவோன் ஆரிய னல்லன்!
ஆரியத் தன்மை யற்றிடுஞ் சிறியர்
யாரிவ ணுளரவர் யாண்டெனு மொழிக!
படைமுகத் திறந்து பதம்பெற விரும்பாக்
(அ௰) கடைபடு மாக்களென் கண்முனில் லாதீர்!

சோதரர் தம்மைத் துரோகிக ளழிப்ப
மாதரார் நலத்தின் மகிழ்பவன் மகிழ்க!
நாடெலாம் பிறர்வசம் நண்ணுதல் நினையான்
வீடுசென் றொளிக்க விரும்புவோன் விரும்புக!
தேசமே நலிவொடு தேய்ந்திட மக்களின்
பாசமே பெரிதெனப் பார்ப்பவன் செல்க!
நாட்டுளோர் பசியினால் நலிந்திடத் தன்வயி
றூட்டுதல் பெரிதென உள்ளுவோன் செல்க!
ஆணுருக் கொண்ட பெண்களும் அலிகளும்
(கூ௰) வீணிலிங் கிருந்தெனை வெறுத்திடல் விரும்பேன்.

ஆரிய ரிருமின் ஆண்களிங் கிருமின்
வீரிய மிகுந்த மேன்மையோ ரிருமின்

மானமே பெரிதென மதிப்பவ ரிருமின்
ஈனமே பொருதல் இயல்பின ரிருமின்
தாய்நாட் டன்புறு தனையரிங் கிருமின்
மாய்நாட் பெருமையின் மாய்பவ ரிருமின்
புலையர்தம் தொழும்பைப் பொறுக்கிலா ரிருமின்
கலையறு மிலேச்சரைக் கடிபவ ரிருமின்
ஊரவர் துயரில்நெஞ் சுருகுவ ரிருமின்
சோர நெஞ்சிலாத் தூயவ் ரிருமின்

தேவிதாள் பணியுந் தீரரிங் கிருமின்
பாவியர் குருதியைப் பருகுவா ரிருமின்
உடலினைப் போற்ரு உத்தம ருதவுமின்
கடல்மடுப் பினுமனங் கலங்கல ருதவுமின்
வம்மினே துணைவீர் மருட்சி கொள்ளாதீர்!
நம்மினே ராற்றலை நாழிகைப் பொழுதெனும்
புல்லிய மாற்றலர் பொறுக்கவல் லார்கொல்!
மெல்லிய திருவடி வீறுடைத் தேவியின்
இன்னருள் நமக்கோர் இருந்துணை யாகும்
பன்னரும் புகழுடைப் பார்த்தனுங் கர்னனும்

வீமனும் துரோணனும் வீட்டுமன் ருனும்,
(இ) ராமனும் வேறுள இருந்திறல் வீரரும்
நற்றுணை புரிவர்! வானக நாடரும்
பற்றறு முனிவரும் ஆசிகள் பகர்வர்
வெற்றியே யன்றி வேறெதும் பெறுகிலேம்
செற்றினி மிலேச்சரைத் தீர்த்திட வம்மின்!
ஈட்டியாற் சிரங்களை விட்டிட எழுமின்
நீட்டிய வேல்களை நேரிருந் தெறிமின்
வாளுடை முனையினும் வயந்திகழ் சூலினும்
ஆளுடைக் காள்க ளடியினுந் தேர்களின்

உருளையி னிடையினு மாற்றலர் தலைகள்
உருளையிற் கண்டுநெஞ் சுவப்புற வம்மின்!
நம்மிதம் பெருவளம் நவிர்ந்திட விரும்பும்

சும்பரை வேரறத் தொலைத்த பின்னன்றே
ஆணெனப் பெறுவோம்! அன்றி நாம் இறப்பினும்
மாணுறுத் தேவர் மணியுல கடைவோம்.
வாழ்வமேற் பாரத வான் புகழ்த் தேவியை
தாழ்வினின் றுயர்த்திய தடம்புகழ் பெறுவோம்.
போரெனி லிதுபோர்: புண்ணியத் திருப்போர்;
பாரினி லொன்று பார்த்திடற் கெளிதோ?

ஆட்டினைக் கொன்று வேள்விக ளியற்றி
வீட்டினைப் பெறுவான் விரும்புவர் சிலரே
நெஞ்சக் குருதியை நிலத்திடை வழித்து
வஞ்சக மழிக்கும் மாமகம் புரிவம்யாம்
வேள்வியி லிதுபோல் வேள்வியொன் றில்லை
தவத்தினி லிதுபோற் றவம்பிறி தில்லை
முன்னையோர் பார்த்தன் முனைத்திசை நின்று
தன்னெதிர் நின்ற தளத்தினை நோக்கிட
மாதுலர் சோதரர் மைத்துனர் தாதையர்
காதலின் நண்பர் கலைதருங் குரவரென்

றின்னவ ரிருத்தல்கண் டிதயநொந் தோனாய்த்
தன்னருந் தெய்விகச் சாரதி முன்னர்,
"ஐயனே யிவர்மீ தம்பையோ தொடுப்பேன்!
வையகத் தரசும் வானக வாட்சியும்
போயினு மிவர்தமைப் போரினில் வீழ்த்தேன்
மெய்யினில் நடுக்கம் மேவுகின் றதுவால்
கையினில் வில்லும் கழன்று வீழ்கின்றது;
வாயுலர் கின்றது; மனம் பதைக்கின்றது;
ஓய்வுறுங் கால்கள்; உலைந்தது சிரமும்;
வெற்றியை விரும்பேன் மேன்மையை விரும்பேன்

சுற்றமிங் கறுத்துச் சுகம்பெறல் விரும்பேன்
எனையிவர் கொல்லினும் இவரை யான் தீண்டேன்
சினையறுத் திட்டபின் செய்வதோ ஆட்சி?"
எனப் பல கூறியவ் விந்திரன் புதல்வன்
கனப்படை வில்லைக் களத்தி லெறிந்து

சோர்வொடு வீழ்ந்தனன்; சுருதியின் முடிவாய்த்
தேர் வயி னின்றநந் தெய்விகப் பெருமான்
வில்லெறிந் திருந்த வீரனை நோக்கி,
"புல்லிய வறிவொடு புலம்புகின் றனையால்
அறத்தினைப் பிரிந்த சுயோதன னியரைச்
செறித்தினி மாய்ப்பது தீமை யென் கின்றாய்
உண்மையை யறியாய் உறவையே கருதிப்
பெண்மைகொண் டேதோ பிதற்றிநிற் கின்றாய்
வஞ்சகர் தீயர் மனிதரை வருத்துவோர்
நெஞ்சகத் தருக்குடை நீசர்கள் இன்னோர்
தம்மோடு பிறந்த சகோதர ராயினும்
வெம்மையோ டொறுத்தல் வீரர்தஞ் செயலாம்
ஆரிய நீதிநீ யறிகிலை போலும்
பூரியர் போல் மனம் புழுங்குற லாயினை!
அரும்புகழ் தேய்ப்பதும் அனாரியத் தகைத்தும்
பெரும்பதத் தடையுமாம் பெண்மையெங் கெய்தினை?
பேடிமை யகற்று; நின் பெருமையை மறந்திடேல்
ஈடிலாப் புகழினை எழுகவோ எழுக!"
என்றுமெய் ஞானம் நம் மிறைவர் கூறக்
குன்றெனும் வயிரக் கொற்றவாள் புயத்தோன்
அறமே பெரிதென அறிந்திடு மனத்தனாய்
மறமே யுருவுடை மாற்றலர் தம்மைச்
சுற்றமும் நோக்கான் தோழமை மதியான்
பற்றலர் தமையெலாம் பார்க்கிரை யாக்கினன்.
விசயனன் றிருந்த வியன்புகழ் நாட்டில்
இசையுநற் றவத்தா லின்றுவாழ்ந் திருக்கும்
ஆரிய வீரர்காள் அவருடை யாற்றலர்
தேரிலிந் நாட்டினர் செறிவுடை உறவினர்
நம்மையின் றெதிர்க்கும் நயனிலாப் புல்லோர்
செம்மைதீர் மிலேச்சர் தேசமும் பிறிதாம்
பிறப்பினி லன்னியர் பேச்சினி லன்னியர்
சிறப்புடை யாரியச் சீர்மையை யறியார்,

புவன சுந்தரி.

எனக்குப் பட்டணத்து வாழ்க்கை பிடிப்பதேயில்லை. ஆனால் என் விதி என்னைப் பட்டணத்தைவிட்டு அப்புறம் போகவொட்டாமல் செய்துவிட்டது. பட்டணத்திலும், நான் வீட்டுப்பூச்சி. எனக்கும் செத்துப்போன மரங்களுக்கும் ஜன்மாந்தர சம்பந்தம் உண்டுபோல இருக்கிறது. மாடியிலிருக்கும்போது நாற்காலி என்னைத் தாயார்போல அணைத்து வைத்துக்கொண்டிருக்கிறது. ஒரு வேளை நடந்தேனானால் என் கைகள் தூண்களோடு உறவாடும். கீழே இறங்கினால் சாப்பிடு மிடத்திலிருக்கும் பலகை என்னை ஆதரவோடு வரவேற்கும். நான் அவசரப் பட்டுச் சாப்பிட்டு ஓடி விடுகிறேன் என்று என் பலகைக்கு என் மேல் வருத்தந்தான். எழுந்து போகும்போது இத்தனை சீக்கிரம்போகாதே என்று சொல்லுவது போல என் வேஷ்டியைப் பிடித்திழுக்கும். ஆனால் நாளைக்கு இன்னும் கொஞ்சம் நேரம் இருக்கிறேன் என்றுசொல்லிவிட்டுக் கை அலம்பினேனோ இல்லையோ உடனே மெத்தைக்கு வந்துவிடுவேன். இருப்பினும் அடுத்த நாளும் இதே கதிதான். பலகை மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்குமோ ஈசுவரனுக்குத்தான் தெரியும்.

இருப்பினும் நாற்காலிக்கு என் மீது எப்பொழுதும் பிரியமே. என்மேல் நாளுக்கு நாள் ஏறும் அன்பினால் அது தன்னுடைய கரடுமுரடுகளை யெல்லாம் நீக்கிக்கொண்டு கைக்கு மிகவும் வெழுமூண இருக்கும். அதுமாத்திரமில்லை, அதை விட்டு நான் அசையாதிருப்பதற்குக் கூலியாகவும் தூண்டுகோலாகவும் அது என் மனதை எங்கு வேண்டுமானாலும் போகவிடும். மனதும் சளைக்காமல் எல்லா இடங்களிலும்சுற்றும். மனதுக்கே பொய்க் கதைகளில் பைத்தியம் அதிகம். அராபியன் நைட் கதைகள், விக்கிரமார்க்க சரித்திரக் கதைகள், ஜகதலப் பிரதாபன் கதை, கிரேக்கக் கதைகள், இத்தாலியக் கதைகள் முதலிய எண்ணிறந்த கதைகளிலுள்ள பொய் உலகத்தில் உலாவி, பறக்கும் குதிரை, கல்லாய்ப்போகும் ரம்பை, தொட்டதை யெல்லாம் தங்கமாக்கும் மீதாஸ் முதலிய விசித்திரங்களைக் கண்டு களித்

துக்கொண்டிருக்கும். ஆனால் நாள் ஆக ஆக இக்கதைகளெல்லாம் அதற்குப் புளித்துப் போய்விட்டன. அந்தப் பொய் உலகங்களில் என்ன சாரமிருக்கிறது என்று கேட்க ஆரம்பித்துவிட்டது. கடைசியாக யோசித்து, பழம்பாட்டி கதைகள் என்று தள்ளிவிட்டோமே ராமாயண பாரதங்களே அந்தக் கதைகளின் உலகம் இப்பொழுது பிடிக்கிறதா பார்க்கலாம் என்று மனது மறுபடியும் ஓர் யாத்திரை புறப்பட்டது. இந்தயாத்திரை அதற்கு இன்பகரமாகவே இருந்தது. ராமனுடைய மகா வீரியம், பரதனுடைய ஆத்ம நிவேதனம், பிராட்டியின் கற்பு; ராவண இந்திரஜித்தர்களின் சௌரியம், அனுமானுடைய பெருங் குணங்கள், யுதிஷ்டிரனுடைய பொறுமை, பீமனுடைய ரௌத்திரம், திரௌபதியின் மனோதிடம், பீஷ்மத் துரோணர்களுடைய சௌரியம், கர்ணனுடைய தீரமும் கொடையும், கண்ணபிரானுடைய சர்வ பரிபூரணத்துவம், இவற்றை யெல்லாம் மறுபடியும் பார்த்துவிட்டு, எப்படி அடா இந்த உயர்ந்த உலகத்தை நாம் திரஸ்கரித்தோம் என்று மனது தன்னையே கேட்டுக்கொண்டு தன்மீது கோபமும் கொண்டது. கடைசியாக, இதற்குத் தண்டனையாக ராமாயணத்தை ஒருமுறை நன்றாகப் படித்துவிடவேண்டும் என்று விதித்துக் கொண்டு படிக்கலாயிற்று.

படித்தால் எங்கு பார்த்தாலும் நதிகள், சோலைகள், மலைகள், வனங்கள் இவற்றின் வர்ணனைதான். முதலில் எனக்கு இவை பிடிக்கவில்லை. சாரமெல்லாம் கதையில் தான் இருக்கிறது என நினைத்தேன். சிவத்தனுசை ஒடித்துச் சர்வாங்க சுந்தரியான சீதையை ராமன் பாணிக்கிரஹணம் செய்துகொள்ளுவதிலும், வாலியை ஓரே அம்பினால் ராமன் வீழ்த்தியதிலும், சீதை ராவணனை நிந்திப்பதிலும், ராமனைக்காணாமல் சோகப்படுவதிலும், இதுபோன்ற கதைகளில் இருக்கிற சுவை வர்ணனைகளில் எங்கே இருக்கிறது என்று என்னை அடிக்கடி கேட்டுக்கொள்ளுவேன். ஆனால் பிரகிருதி நம்மைத் தன் வசப்படுத்த எங்கு பார்த்தாலும் கண்ணிகள் வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறாள்; நம்மைத்தான் அவன் கவனிப்பதில்லையே நாம் ஏன் அவனை லக்ஷியம் செய்யவேண்டும் என்று அவள் விட்டுவிடுவதே இல்லை. "முகம்மது மலையினிடம் வராவிட்டால் மலை முகம்மதிடம்

போக ஆக்ஷேபணையில்லை," என்பது பிரகிருதி தேவியின் மதம் போலும். ஆகையால் நான் வழக்கமாக உட்கார்ந்திருக்கும் வெளி அறையின் அகன்ற திறப்பின் வழியாக அவளுடைய அப்பிரமேயமான அழகின் லேசா லேசத்தைக் காட்டிய வண்ணமாயிருந்தாள். மெல்ல மெல்ல எனக்கு முருங்க மரத்தின் மென்மையையும், வேப்பமரத்தின் எழிலையும், தென்னையின் அரிய அழகையும் உணர்ந்து பார்த்து அனுபவிக்க முடிந்தது. வாதுளஞ் செடியின் மீது கூட்டமாய் வந்து உட்கார்ந்து கிளை களைக் காற்று அசைப்பதைவிட அதிகமாகக் குலுக்கிவிடும் குருவிகள் எனக்குச் சொந்தமாயின. காற்றை வெட்டிக் கொண்டு செல்வதுபோல ஒரு நிமிஷத்துக்குள் பறந்தோடி விட்ட கிளியானது என் மனதாகிய சித்திரப் பலகையில் ஒரு இழை இளம் பச்சைக் கோலத்தைப்போட்டு விட்டே போயிற்று. இன்னொரு புறம் வாழைமரத்தின் அகன்ற இலைகளும், வேப்பஞ்செடியின் தலையும், தென்னையின் உடலும், நீல வானத்தில் பல்வேறு உருவங்களைச் சமைத்து அவியக்தமான ஆகாயத்திற்கு நிமிஷத்துக்கு நிமிஷம் புதிதாயிருக்கும் அழகைத் தந்தன; இன்னும் காது கொடுத்துக் கேட்கையில் காக்கையின் கத்துதலும், குருவியின் சிட்டியும், கிளியின் கீகீயும், கருடனுடைய 'கிருஷ்ண' சத்தமும், வண்டுகளின் ரீங்காரமும் எனக்கு ஓர் ஆனந்தத்தைக் கொடுக்கலாயின. இதை எல்லாம் பார்த்தும் கேட்டும் வரவர, பிரகிருதியின் மீது எனக்கு அத்தியந்தமான ஆசை பிறந்துவிட்டது. அவள் தனி அரசு செலுத்தும் நாட்டுப்புறங்களையும் காடுகளையும் பார்க்கவேண்டும்என்ற அவா அதிலிருந்து ஏற்பட்டது. அதன் பிறகுதான் நான் தோப்புகளுக்கும், துறவுகளுக்கும், கழனிகளுக்கும், காடுகளுக்கும் போகத் துவக்கினேன். இதற்கெல்லாம் நாற்காலி சம்மதித்ததா என்று போக்கிரிச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு சிலர் கேட்பார்கள். உன்னுடைய பந்துக்களைத் தான் பார்த்துவரப் போகிறேன் என்று அதற்கு நிரம்பச் சொல்லியதன்மேல், அந்தப் பந்துக்களைப் பற்றி என்னண்டையிலே உட்கார்ந்துக்கொண்டு அடிக்கடி எழுதவேண்டுமென்று சொல்லி என்னிடம் வாக்கு வாங்கிக்கொண்டு கடைசியாய் நாற்காலி என்னைப் போகவிட்டது. எங்களுடைய ஒப்பந்தத்தை ஸ்டாம்புக்

கடுதாசியில் எழுதி ரிஜிஸ்தர் செய்யாவிட்டாலும் அதை மீறி நடப்பதான உத்தேசம் எனக்கு எள்ளளவேனும் இல்லை.

இப்படி ஆரம்பித்தது எனக்கும் பிரகிருதிக்கும் உள்ள நட்பு. அவள் சுயேச்சையாய் வீற்றிருக்கிற இடங்களுக்கு அடிக்கடி செல்லலுற்றேன். அங்கே இருக்கும் சௌந்தர்யக் கடலைப் பார்த்துவிட்டு அவளுக்குப் புவன சுந்தரி என்ற பெயரை வைத்தேன். உலகத்தில் மனிதனுகச் செய்கிற எந்தச்சித்திரம் எந்தச் சிற்பம் இவளுடைய அழகினுக்கு இணையாகும்! சரஸ்வதி படத்தில் ரவிவர்மா எழுதியிருக்கும் காந்தள் மலரும், வெண்டாமரைகளும் செந்தாமரையும் நீரோடையும் நன்ருகத் தானிருக்கின்றன. ஆனுல் மரங்களையும், மலர்களையும், ஏரியையும், குளத்தையும் அவைகளின்மீது கொஞ்சும் ஆயிரவிதமான ஒளிபேதங்களையும் திறந்த கண்ணுல் பார்த்து அனுபவித்தவர்களுக்கு ரவிவர்மா மாத்திரம் இல்லை செம்பாரநடார்னர் சீன ஜப்பானியச் சித்திரக்காரர்கள் ஆகிய யார் எழுதும் சித்திரமுந் தொழிலின் சாமர்த்தியத்தைப் பற்றிப் பிறக்கும் ஆச்சரியத்தைத்தான் தருமே யன்றி, திரிபுவன சுந்தரியான பிரகிருதேவியின் கண்கொள்ளாக்காட்சிதரும் ஆனந்தத்தைத் தாராது.

பிரகிருதியின் ஒவ்வொரு தோற்றத்தினின்று எத்தனை கற்றுக்கொண்டு விடலாம். அதோ அங்கே நீரோடையில் ஊஞ்சலாடும் மலரை எடுத்துக்கொள்ளலாம். அந்த மலர் என்ன? அந்த கொடி கேவலம் ஜீவித்திருப்பதில் அனுபவிக்கும் ஆனந்தத்தின் ஒரு சின்னம். ஆனந்தம் நிஷ்களங்கமாயிருக்கின்றது. செடியின் ஜீவன் முழுவதும் இந்த மலரின் தளங்களில் திமிறிக்கொண்டு நிற்கின்றது. கடவுளின் ஆகாயத்தையும் பிரகாசத்தையும் இளங்காற்றையும் நீரையும் கண்டு அக்கொடி களி எய்தி மலராகிற ஆனந்தப் புன்முறுவல் பூத்திருக்கிறது. இவ் அகண்டமான பிரம்மாண்டத்தில் இடை விடாமல் நடக்கும் நித்தியோற்சவத்தில் இந்தச் சிறு மலருக்கும் இடம் உண்டு. இது இல்லாவிட்டால் அம்மட்டுக்கு உற்சவத்தின் மகிமை குன்றும். ஆனுல் அதற்காக அதனிடத்தில் லவலேசமாயினும் கர்வமில்லை. கர்வம் ஒரு பக்கம் இல்லை என்ருல் இன்னெரு பக்கம் தன்னையே குறைத்துக்கொள்ளும் நாணமும் அதனிடம் இல்லை. மனிதருக்

குள் காணப்படும் போலி வாழ்க்கை அதற்குத் தெரியவே தெரியாது. பிறர் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களெதிரே நாம் நம்முடைய அலங்காரம் அனைத்தையும் காட்டிவிடவேண்டும் என்று நினைத்துக்கொண்டு அது பட்டாடோபமும் செய்யவில்லை. இத்தனை பேர்களில் யாராவது நம்மிடமுள்ள குறைகளைக் கண்டு நகைத்துவிடப் போகிறார்கள் என்று நினைத்துக்கொண்டு அது பயப்படவும் இல்லை. சகஜமான நிலை அதன் நிலை. இந்த நிலையில் இருப்பதனால் தான் அதன் வாழ்க்கை பரிபூரணமாயிருக்கிறது. அது ஆனந்தத்துக்கே நிலயமாக விளங்குகிறது. கடவுளுக்கு மனிதரால் செய்யப்படும் பூஜையில் அதற்குப் பெரியவர்கள் முக்கிய ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இப்படிக் கேவலம் ஜீவித்திருப்பதிலேயே ஆத்மலயத்தை அடைந்து சர்வாங்க சுந்தரமாய் விளங்கும் மலர், தன்னுடைய ஜாதியை வளர்ப்பதற்குக் காரணமாக வித்தைக் காப்பாற்றி வளர்ப்பதற்காகத் தன் அலங்காரங்களை எப்படி நிர்த்தாக்ஷண்ணியமாய்க் களைந்தெறிந்து விடுகிறது! இப்பொழுது அதன் வாழ்க்கையின் நோக்கம் தானன்றி, மற்று அதன் கிளை, வம்சம், ஜாதி அவை இடையறாது பெருகி வருவதற்காக அது தன் வர்ணங்களைக் கொடுத்துவிடுகிறது, செழுமையைக் கொடுத்துவிடுகிறது; வாடிப்போய்விடுகிறது; தளங்களை உதிர்த்துப் போட்டு விடுகிறது; தன்பெயரேகூட அற்றுப்போகும்படி செய்துகொண்டுவிடுகிறது. ஆனால் இந்தத் தன் மறுப்பின் பயனாக அதைப் போன்ற பொலிவும் எழிலும் உள்ள எண்ணற்ற மலர்கள் உலகத்தில் தோன்றுகின்றன. அத்தனை மலர்களின் ஜீவனிலும் அது அன்றைக்கு ஜீவித்திருக்கும். ஆத்ம சந்நியாசனத்தில் இத்துணை கௌரவம் மாத்திரமில்லை கேவலம் லாபமே இருக்கிறது.

இப்படியே பிரகிருதியின் ஒவ்வொரு அவயமும் நமக்கு நேத்திரானந்தத்தையும் சுரோத்திரானந்தத்தையும் இதர இந்திரியங்களுக்கு ஆனந்தத்தையும் தருவதோடு அகண்ட உலகத்தோடு சம்மேளித்து நிற்கும் வழியையும் நமக்கு இடைவிடாது

காட்டிவருகிறது. நமது மாதர் இந்த சனாதனமான நாடகத்தைக் கண்டு களித்து வருவார்களானால் நிரதிசயமான ஆனந்தத்தை அனுபவிப்பதோடுகூட வாழ்க்கையின் ரகசியசகஜநிலையென்றும், பிறருக்காகச் சகலத்தையும் விடத் துணியும்போது நம்முடைய வியாப்பிய சக்தி அனந்தமாகி விடுகிறது என்றும் ஒரு சரீரத்தால் அனுபவிக்கிற ஆனந்தத்தை ஆயிரம் பதினாயிரம் சரீரங்களால் பன்மடங்காகப் பெருக்கி அனுபவிக்கமுடியும் என்றும் அறிந்துகொள்ளுவார்கள்.

நமது சகஜமற்ற வாழ்க்கையில் பிரகிருதி தரிசனமே குறைவாக இருக்கும்போது பிரகிருதியின்மீது நமக்குக்காதல் பிறக்கிறது கடினம். ஆனாலும் மேலே எழுதியதைப் படிப்பவர்கள் நம்மைச்சுற்றிலும் எத்தனை அளவற்ற செல்வம் இருக்கிறது என்றும், அந்தச் செல்வத்தை நாம் பெற நம்முடைய கண்களையும் மற்றப்புலன்களையும் ஆதரவோடு உபயோகப்படுத்துவதைத் தவிர வேறு உழைப்பாவது விலையாவது வேண்டியதே யில்லை என்றும் உணர்வார்களாகையால் பிரகிருதியை அன்போடும் அறிவோடும் பார்க்கக் கற்றுக்கொள்ள முயலுவார்கள் எனவே நம்புகிறேன். அதற்குத் தம்மைச்சுற்றியுள்ள கருவிகளையே முதலில் உபயோகிப்பார்கள். வீட்டு முற்றத்திலிருக்கும் துளசி செடியை சிரத்தையோடு பூஜிப்பார்கள். வீட்டுக் கொல்லையில் வளரும் செடிகளுக்கு ஜலம்பாய்ச்சி, களையெடுத்து, பூச்சிகளை எடுத்து, சாணம் முதலிய எருக்களைப்போட்டு ஆசையோடு வளர்ப்பார்கள், வளரும் அங்குரங்கள், சிற்றிலைகள், கொடிகள், மலர்கள், காய்கள், பழங்கள், முதலியவற்றை ஊன்றிப்பார்த்துப் பார்த்து பிரகிருதியின் ஜீவசக்தியைக்கண்டு வியப்படைவார்கள். வானத்தின் நீலம், மேகங்களின் வர்ணங்கள், அவற்றின் உருவ மாறுபாடுகள், க்ஷணத்துக்கு க்ஷணம் லாவண்யம் அதிகமாகக் காட்டும் சூரியனுடைய காலை மாலை ஒளி, சந்திரனுடைய மிருதுவான பிரகாசம், நக்ஷத்திரங்களின் மினுமினுப்பு, மழைத் துளியின் நயம், மழைவானத்தின் காம்பீரியம் இவைகளையெல்லாம் வீட்டினின்றே பார்த்துக்கொள்ளலாம். ஆனால் இவற்றின் அழகின்மீது கண்வைத்துக்கொண்டு பார்த்தால் தான் நமக்கும் பிரகிருதிக்கும் சம்மேளனம் ஏற்படும். ஒவ்வொரு தோற்றத்

திலும் நம் அன்பைச் செலுத்தினேமானால்தான் அதன் வனப்பு நமக்கு வெட்ட வெளிச்சமாய்த் தெரியும். ஆகையால் தம்மைச் சுற்றியுள்ள தோற்றங்களைக்கண்டு வியந்து, பிரகிருதியை நேசிக் கத்துவக்குவார்கள், அதன் பிறகு கோவில் குளங்களுக்கும் போகும் போதும், பிரயாணம் போகும்போதும் பிரகிருதியின் ஆனந்தத்தை உண்மையான சுவையுடன் அநுபவித்து அதனின்று கற்கு மவற்றையெல்லாம் கற்றுக்கொண்டு தங்கள் வாழ்விற்குப் பரிபூரணத்தைக் கொடுத்துக்கொள்ள அவர்களுக்குச் சக்தி ஏற்படும்.

சிலருக்காவது திரிபுவன சுந்தரியான பிரகிருதி தேவியின் மீது இவ்வியாசம் பக்தி உண்டாக்குமானல் அது மிகுந்த பயன் தந்துவிட்டது என்று சந்தோஷமுறுவேன்.

("தேசபக்தன்".)

பிரபஞ்ச அநுபவம்.

(உறையூர், நூலாசிரியர் திரு. எஸ். வி. வரதராஜய்யங்கார்.)

1. ஊரில் பெரிய மனிதர் என்பவர் யார்?

அவர் பணக்காரருமல்ல; பருத்த தேகத்தை யுடையவருமல்ல; பேச்சுக் காரருமல்ல; வாயாடி வம்பருமல்ல; பொது ஜனக்ஷேமத்தைக் கருதி யுழைப்பவரே.

2. உலக ரகஸ்யம் என்ன?

அது பசி என்ற இரண்டெழுத்துச் சொல்தான்! பசியில்லாவிடில் அரசன் இல்லை; பொருளீட்ட வேண்டு மென்ற ஆசையில்லை; பெரிய மனிதன் சிறிய மனிதன் என்பதில்லை. அதிகம் கூறுவானேன்? பசியில்லாவிட்டால் உலகமே நடைபெறாது. இதில் விளங்கும் இறைவனது அபார அறிவு. இந்தப்

பசியடங்கினால் பின்பு ஸ்திரீ ரத்னங்களைத் தேடியலையும் காமம் என்ற வேட்டை நாய்!

3. துன்பம் நேரிடுங்கால் கடவுளை நிந்திப்பதும் 'பாழும் தெய்வமே உனக்குக் கண்ணில்லையா?' என்பதும், பின்பு சுகப் படும் பொழுது ஐயனை நினைந்து அவனுக்குத் தன் நன்றியறி தலைச் செலுத்தாதிருப்பதும் மானிட உலகில் இயற்கையாகிவிட் டது கஷ்ட சுகங்களை ஏகமாகப் பாவித்து எக்காலத்தும் ஈசனை வழுத்துகின்றவனே ஞானியாவான்; அவனேஐயனுக்குகந்தவன்.

4. திரண்ட செல்வமும், தீக்ஷண்ய அறிவும், பக்தி சித்த வைராக்கியமும் உடையவர்கள் அற்ப ஆயுள் வரம்பெற்று உலகில் ஜனிக்கின்றனர். மூட பக்தியும், மிருக பலமும், கெட்ட எண்ணமும், துஷ்ட சகவாசமும், நீடித்த பிணியும், தொடுத்த வறுமையும் உடையவர்கள் உலகில் 'தரித்ரோ சதாயுசு' என்றபடி பல ஆண்டுகள் தொண்டு கிழமாகும் வரையில் அவஸ்தை இடி பட்டுக்கொண்டு நீண்ட ஆயுள் வரம் பெற்று உழலுகின்றனர். எல்லா நற்குணங்களும், நற்செய்கைகளும், செல்வமும் பொருந்தியவர்கள் அதிக காலம் ஜீவித்திருப்பது துர்லபம்.

5. உனக்கு உற்ற உரவினராயிருப்பினும் அவர்களிடம் நீ நெருங்கிப் பழகவேண்டாம். உன் மதிப்பெல்லாம் குறையக் கூடிய ஏளனமான நிலைமையிலுன்னை யவர்கள் நடத்துவார்கள். அதனால் நீ வெறுப்படைவாய்; பின்னர் உறவினர் பெருமை அவ்விடத்தை விட்டகலும்; அதன் முடிவு மனஸ்தாபந்தான் 'தூரப்பச்சை கண்ணிற்குக் குளிர்ச்சி' என்ற பழமொழியைச் சற்று சிந்தித்து பார்.

6. தான் செய்த குற்றத்தை மறைத்துவிட்டு, அக்குற் றத்தை உன்மீது சுமற்றி, தன்னை நல்லவராக்கிக் கொண்டு, உன்னை தூஷணைகளுக்குள்ளாக்கி, நயவஞ்சகமாகப் பேசி உன் னைப்பாழும் படுகுழியிற் றள்ளிவிடத் தருணம் பார்த்து நிற்பார் பலர். அவர்கள் உனது நெருங்கிய பந்துவாயினும் வெகு ஜாக் கிரதையாகத் தாமரை மலரிலிட்ட நீர்போல அவர்களுடன் பழகு.

7. பிறரிடத்தில் நகையோ, பாத்திரமோ மற்ற எதையோ ஏனோ கொடுத்து ஏமாறுகிறாய்! 'இரவல் சதமாகுமா' என்பது பொதுப்படையாக உனக்கும் அவர்களுக்குமான பழமொழி யல்லவா? இரவல் கொடுப்பதும் வாங்குவதும் மனஸ்தாபத்தில் கடைசியாக வந்து முடிவதை நீ எவ்வளவு இடங்களில் நிதரிசனமாகக் கண்டிருக்கிறாய்!

8. 'நான் செய்தேன்' 'நான் செய்கிறேன்' 'நான் செய்வேன்' என்று நான் பிரயோகம் செய்கின்றவர் பலர். நான் என்பதன் பொருளென்ன என்பதை யவர்கள் சிறிது சிந்திக்கட்டும்.

9. பெயரோ 'பொது நல சேவகர்'. செய்கையோ 'சுயநல சேவை'. தன் கடமையை யுணர்ந்து சரிவரச் செய்வோர் வெகு சிலர். கடமையை யுணர்ந்து பொதுநல ஸ்தாபன ஸ்தானங்களை வகிப்பவர்களோ வெளிவேஷம் போடுவோர். அவர்கள் உள்ளமோ—பொறாமை, பொய், தூஷணை, கொடுமை முதலியவற்றின் வாசஸ்தலம்.

10. 'தீண்டாமையை ஒழிக்கவேண்டும்' 'விதவா விவாகம் நியாயமானது' என்று மேடைமீதேறி வீராவேசத்துடன் பேசினார் ஒரு பிரசங்கியார். அவர் தன் வீட்டிலேயே யுள்ள ஓர் இளம் விதவைக்கு விவாகம் செய்யாதிருப்பதையும், அவருடைய பூமியைச் சாகுபடி செய்யும் தீண்டாதார் வகுப்பைச் சார்ந்த ஒருவனை 'தீண்டாதே' என்று கூறுவதையும் கண்ட பிரசங்கம் கேட்ட ஒருவர், அப்பிரசங்கியாரை பேட்டிகண்டு கேட்டபொழுது 'நான் ஊருக்குச் சொன்னேன்' என்றாராம். தான் பிறருக்குப் போதிப்பதைத்தானே செய்து அனுஷ்டித்துப் பிறரையும் அவ்வழி நடக்கச் செய்கின்றவரே மகாத்மா வாவார். அவ்விதம் செய்பவர் மகாத்மா காந்தியடிகளேயன்றி வேறுயார்?

தர்மம்.

(எட்டயபுரம், தமிழாசிரியர் திரு. ஸ்ரீ. ரேங்கய்யங்கார்.)

• கடவுள் உலகைப் படைத்தபோது, அது நடுங்கிக் குலையத் தொடங்கியது; எனவே, மலைகளைப்படைத்து, அந்தப் பூமி மேல் இட்டார்; அதனால் பூமி அசையாது ஒரு நிலை நின்றது.

இது கண்ட தேவர்கள், மலையின் உறுதியைக் கனத்தை வியந்தவராய், "எந்தாய்! இந்த மலைகளிற் கனமானதில்லையா?" என்றனர். 'உண்டு; மலைகளையும் அறுத்துச் செல்லும் புனல் (நீர்) அதனினும் கனமானது." என்றான் ஈசன்.

"ஆனால், அந்நீரினும் கனத்தவை உண்டோ?" என்ற தேவர்க்கு, அக்கடவுள், "காற்று ஜலத்தினும் கனத்தது; அந்நீரை அலைத்துச்செலுத்தும் திறல் அது பெற்றுள்ளது" என்றார்.

"காற்றின் மிக்கது உங்கள் படைப்பில் எது?" என்றனர் தேவர். 'இரந்தவர்க்கு, 'இல்லை' என்னாது கொடுக்கும் மனிதர்; வலக்கை தந்ததை யிடக்கைக்கும் அறிவியார் அவர்; அவர்எவற்றினும் மிக்க பெருமையவர்."என்று அக்கடவுள் இறுத்தனன்

வாழ்வில் ஒரு வெள்ளிக் காசு ஈவதே, சாம்போது ஆயிரம் பொற்காசு வழங்குவதினும் மேலானது

உன் சகோதாரில் ஒருவனே, மலர்ந்த முகமும் இரங்கிய சித்தமும் கொண்டு, உன்னிடம் வந்து இரப்பானாயினும், ஈகை யிகழத் தக்கது என்று நீ கருதற்க.

பகல் எழும் ஒவ்வொரு நாளும், மனிதன் ஒவ்வோர் உறுப்புக்கும் ஈகை ஏற்படுகிறது: இருவர்க்கு இடையே வழக்குத் தீர்ப்பதும் ஈகை; சுமைதூக்கிகளுக்கு உதவுதலும் தர்மமே. மேன்மை தரும் சத்திய வசனங்களைப் பேசுதலும் தர்மமே. கேட்டோர்க்கு இனிய முகத்துடன் மெல்லிய சொல்லாற் பதில் சொல்வதும் அறமே. ஈஸ்வரோபாசனையிற் செலவிடும் காலமும் ஈகையே. வழியில் மனிதர்க் கிடைஞ்சல் தரும் கல், முள் பொறுக்கிக் களைதலும் தர்மமே.

ஞானியார் வீட்டு மடையர் (சமையற்காரர்), ஓராட்டைக் கொன்றனர். ஞானியார், 'அதில் எஞ்சியது உண்டா?'' என்றார். ''தொடையன்றி மிச்சமில்லை, மற்றப் பாகங்களெல்லாம் ஊரில் எளியவர்க்கு விநியோகிக்கப்பட்டன'' என்றனன் மற்றவன்.

''அப்படி இல்லை; தொடையே அன்றி மற்றவை எல்லாம் தான் மிச்சம்; ஏனெனில், கொடையின் பலன் அழியாதது; கொடாமல் இங்கே நிற்பது அழியத் தக்கது.'' என்று ஞானியார் கூறினர்.

''பசித்தாரை ஊட்டு; பிணியினரைக்கண்டு ஆதரி; முறையின்றி அடைபட்ட கைதியை விடுவி''. (முகம்மது நபி)

செய்ய முடியாதனவும் சில உள; ஆயினும் செய்ய வழியில்லாமலன்று, பெரும்பாலும் சரியானபடி செய்யாமையாலேயே, மனிதர் காரியசித்தி பெறாது ஒழிகின்றனர்.

மனிதர் செய்யத்தகாதவற்றைச் செய்து கெடுகின்றனர்; அதுபோலவே, செய்யத்தக்கவற்றை காலத்தாலாராய்ந்து செய்யாமலும் கேடு அடைகின்றனர்.

''செய்தக்க அல்ல செயக் கெடும்; செய்தக்க
செய்யாமையானும் கெடும்.''

அற்ப காரியங்களிலேயே அதிகமாக மனம் பற்றினவர், பின் பெருங்காரியங்களைச் செய்யத் திறனிலாராகின்றனர்.

ஆத்திரத்தோடு ஒன்றைப் பெற நாம் விரும்புமுன் அதை உடையவர் அதனால் அடைந்திருக்கும் இன்ப துன்பங்களை ஆராய்ந்து கொள்ளவேண்டும்.

மேகம் தோன்றி மறைவதையும், அதன் இடை மகிழ் நிலா விரிக்கும் இளம்பிறை மறைந்தும் ஒளிர்ந்தும் செல்வதையும், நாளும் நாளும் பார்க்கின்ற மனிதர்கள், ''நாமும் தோன்றியபடியே மறையவும் செய்வோம்'' என்பதையும், ''மேகம் போல் துன்பங்களும், மேகமில் நீல விசும்புபோலத் தடையில் இன்பமும் நம்மைக் கவிந்து நிலைத்துக் குறுக்கிட்டாலும், அவற்றைப் பொறுத்தும் ஈடுபடாமல், நம்முறு கடமையே குறியாக

மேற் சென்று வீறவேண்டும்'' என்பதையும் மட்டும் உணர்வதில்லை.

புலவர் சிந்தனையும், உழைப்பாளிகள் உழைப்பும், பெண்டிர் கற்புமே நாட்டின் வலிமைக்கு ஆஸ்பதமாகின்றன.

உதய பூமியும் பாரத வருஷமும்

II

இவற்றிலிருந்து, நம் நாட்டாரின் க்ஷீண திசைக்குக் காரணம் தெளிவாகிறது. இன்னும் சற்று விரிவாக, ஜப்பானிய அரசாங்கத்தாரும் இந்திய அரசாங்கத்தாரும் முறையே தத்தம் குடிகளுக்குச் செய்த நன்மைகளை ஒப்புநோக்குவோம். முதன் முதல், ஜப்பான் அரசாங்கம் தன் நாட்டுக் குடிகளில் ஒவ்வொருவருக்கும் கல்வி அவசியமென்றும், ஒரு வீட்டிலாவது படியாதவன் இருக்கக்கூடாதென்றும் விதி செய்ததென்றுசொல்லியிருக்கிறோம். இதிலிருந்து, இந்நாடு தற்காலம் உலகத்திலே கற்றவர்களின் வீதம் அதிகமாகக் காணப்படும் என்பது நன்றாய் விளங்குகிறது இந்தியாவிலோ, அன்னியராட்சி. இந்நாட்டு ஜனங்களுக்குக் கல்வியை மறுத்து, நூற்றிருபது வருஷங்களுக்குப் பின், இது போழ்து நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் கல்லாதவர் பெருகி இருக்கும் நாடாகக் காட்டுகிறது. இரண்டாவதாக ஜப்பான் ஆரம்பமுதல் தன்னிடத்திலே ஆலைத் தொழில்களையும் கைத்தொழில்களையும் வளர்த்து வந்து, இப்பொழுது ஆசிய நாடுகளிலே கைத்தொழில் தலை சிறந்து விளங்குகிறது. இந்தியாவின் அயல் அரசாங்கமோ, ஆங்கிலேயர்களின் நன்மையைக் கருதி வரிகளாலும் இன்னும் பலவிதமாயும் இந்தியாவின் பேர் போன கைத்தொழில்களையெல்லாம் அழித்து,கைத்தொழிலில் சிறந்து விளங்குவதற்குப் பதிலாக, ஆங்கில நாட்டின் கைத்தொழில்களை வளர்க்கக் கருப் பொருள்களை அனுப்பும் நாடாகச் செய்துவிட்டது. மூன்றாவதாக, ஜப்பானின் சுய அரசாங்கம் ஆதிமுதல் அயல் நாடுகளோடும், உள் நாட்டிலும் வியாபாரத்தையும், கப்பல் தொழிலையும் அபிவிருத்தி செய்து, ஆசியாவில் முதன்மை வகிக்கும் நாடாக மட்டுமல்ல, உலகத்திலேயே

முதன்மை பெற்ற நாடுகளில் ஒன்றாகச் செய்துவிட்டது. இந்தியாவின் ஆங்கில அரசாங்கமோ; இந்தியர்களுக்கு விரோதமாக நிற வேற்றுமை பாராட்டி, பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கும் கப்பற் கூட்டத்தாருக்கும் விசேஷ ஆதரவளித்தும், இந்தியாவின் நன்மைக்காக இந்திய ஜனங்களால் நடத்தப்பட்டுவந்த கப்பற்றொழிலையும், பரந்த வியாபாரத்தையும் கொன்று, தற்காலம் இந்தியாவின் அயல் நாட்டு வியாபாரமெல்லாம், பெரும்பாலும் ஆங்கிலேயர் கையிலும், ஆங்கிலேயர் நிர்வாகத்திலும் புகுந்து கொள்ளவும், ஆங்கிலேயர் செல்வத்தையே வளர்க்கவும் வசதி யமைத்துவிட்டது. இன்னும் இப்பெரிய வியாபாரத்துக்குக் கருவியான கப்பல்களும் இந்தியாவிலே செய்யப்படுவதற்குப் பதிலாக, ஆங்கில நாட்டிலே செய்யப்பட்டு, இந்தியாவிலிருந்து ஒரு கைத்தொழிலையும், அதனால் வரும் அறிவாற்றல்களையும், பேருதியத்தையும் கவர்ந்து கொண்டது. கடைசியாக, ஜப்பான், தொடக்க முதலே மேற்சொன்ன வழிகளிலும், இன்னும் பிறவழிகளிலும் தன் நாட்டுப் பொருளைப் பெருக்குவதற்குச செய்யவேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்துகொண்டிருந்தது. இதற்கு மாறாக, இந்தியாவிலோ, இந்நாட்டின் பொருள் வருவாயைப் பெருக்கும் கைத்தொழில்களை யெல்லாம் அழித்ததோடமையாது, ஆரம்ப முதலே கருக் கட்டிக்கொண்டு, இடைவிடாமல், இந்தியாவின் செல்வத்தை யெல்லாம் ஆங்கில நாட்டுக்கு அடித்துக்கொண்டு போய்விட்டது. இந்தியக் கைத்தொழில்களுக்கு உயர்ந்த வரிகளை விதித்தும்; இந்தியாவில் வாங்கக்கூடிய கருவிகளை யெல்லாம் அதிகச்செலவில் ஆங்கில நாட்டிலே வாங்கியும்; இந்தியாவுக்கு ஒரு நன்மையும் பயவாது ஆங்கிலநாடு புரிந்த யுத்தங்களுக்கெல்லாம் இந்தியாவைச் செலவு கொடுக்கச்சொல்லியும்; அரசாங்கத்தின் உயர்ந்த உத்தியோகங்களிலே குறைந்த சம்பளத்தில் வேலைத்திறமை மிகுந்த இந்தியர்களை நியமியாமல், வேலைத்திறமை குறைந்த ஆங்கிலேயர்களை மும்மடங்கு சம்பளம் கொடுத்து நியமுகம் செய்தும், இருபத்து நான்கு வருஷம் இந்தியாவில் சேவகஞ்செய்த ஆங்கில அதிகாரிகளுக்கு, ஆயுட்காலமெல்லாம் ஆங்கில நாட்டிலே தங்களைத் தட்டின்றிக் காப்பாற்றக் கூடியவளவு, கொழுத்த உபகாரச் சம்பளங்களை வழங்கியும், இன்னும் எத்தனையோ வழிகளில் ஆங்கில அரசாங்கம் இந்தியா

வின் செல்வப் பெருக்கை யெல்லாம் உறிஞ்சி விட்டது. இவ்விரு நாடுகளிலும் இவ்வளவு வேற்றுமை ஏற்படக்காரணம், ஜப்பான் தன் நாட்டாரால் ஆளப்படுதலும், இந்தியா அயல் நாட்டாரால் ஆளப்படுதலும் தவிர வேறென்ன?

இந்நாடுகளிற் காணப்படும் வேற்றுமைக்குச் சிலர், 'உலகானுபவம் ஜப்பானியருக்கு அதிகம்; இந்தியருக்கில்லை' யென்று காரணங் காட்டுகின்றனர். சுதீந்திர வசு என்ன சொல்லுகிறார்? "சுமார் எழுபது வருஷங்களுக்கு முன், ஜப்பானியர், மேல்நாட்டார் ஒப்புக்கொள்ளக்கூடிய உலகியலறிவு ஒரு சிறிதும் இல்லாதவர்களாய், பெருங்கைத் தொழில்களும் பரந்த அயல்நாட்டு வியாபாரமு மின்றி, உலகத்தோடு கூட்டுறவில்லாத கிணற்றுத் தவளைகளாக விவசாயம் செய்துகொண்டிருந்தார்கள்" என்கிறார். இப்பொழுது இரண்டு தலைமுறைகளுக்குள்ளாக, உலகானுபவம் முதிர்ந்து விட்டார்களோ வென்றால், வெளிநாட்டாருடைய கூட்டுறவும், கல்வியும், எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள், சுதந்திரமுமே காரணம். இந்தியாவிலோ, எண்ணிறந்த மேதைகளும் புலவர்களும், கவிஞரும, வேதாந்திகளும், மதப்பிரவர்த்தகர்களும், தொண்டர்களும் சிறந்து விளங்கியதும் தவிர, விவசாயிகள், சிற்பப் புலவர்கள், வியாபாரிகள், போர் வீரர் முதலான உலகியல் துறைகளிலும் இலட்சக் கணக்கான வகுப்பார்கள் விளங்கியிருந்தார்கள். இன்னும் ஒரு விஷயம் மறந்துவிடக்கூடாது. ஐரோப்பிய் அறிவாலும், கலைகளாலும், ஆசியாவில் உண்டான மறு மலர்ச்சி முதன் முதல் தொடங்கியது, ஜப்பானில் அன்று, இந்தியாவிலேயே. ஜப்பானைவிட இந்தியாவே, ஐரோப்பாவோடு நெருங்கிப் பழகியது. ஜப்பானில் வெளி நாட்டார் கூட்டுறவு ஏற்பட்டு ஞானோதயம் உண்டாவதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்னமே, ஆசியாவின் மறு மலர்ச்சி, வங்காளத்தில் இராம மோகன ராஜர், ஈசுவரசந்திர வித்தியா சாகரர் இவர்கள் மூலமாகத் தோன்றி, நவீன கருத்துக்கள் நிறைந்த இலக்கியங்கள் வங்க நாடு முழுவதும் பெருகக் காரணமாயிருந்தது. இவ்வாறு, வங்க தேசத்தில் தோன்றிய இவ்வியக்கம், முதிர்ச்சி யடைந்து மற்ற நாடுகளுக்கும் பரவி, இந்தியாவில் மட்டுமல்ல, ஆசியாக் கண்டம் முழுவதிலுமே, மிகுந்த பலனைத் தந்திருக்கலாமே

யென்றால், அன்னியர்களாலன்றி நம்முடைய தலைவர்களால் நம் நாடு ஆளப்பட்டிருந்தால், அங்ஙனமே நடந்திருக்குமென்பதை யாரால் மறுக்க முடியும்?

இவ்விரு நாடுகளின் நிலைமையையும் ஒருவாறு சுருங்கக் கூறிவிடலாம். ஜப்பான் மிகுந்த அபிவிருத்தியடைந்து உலகத்து நாடுகளின் முன்னணியில் இடம் பெற்றிருப்பதற்குக் காரணம், அது சுதந்திரம் பெற்றிருந்தமையே. 1852-ம் வருஷத்திலே 'பெர்ரி' என்னும் அமெரிக்க மாலுமி உதய பூமியின் கதவுகளைத் தட்டி உலக வியாபாரத்துக்குத் திறந்து வைத்த பொழுது, அவர் அந் நாட்டை ஜயித்து அடிமைப் படுத்தவில்லை, கொள்ளையிடவுமில்லை. அதன் சுயாதீனத்தையும், உரிமைகளையும், நன்கு மதித்து, சமகௌரவம் கொடுத்துக் கையைப் பிடித்து, உலகத்தின் சுதந்திர நாட்டார்களின் கூட்டுறவைச் செய்துவைத்தார். அதனால் தான், அந் நாடு அவ்வளவு முன்னேற்ற மடைந்தது. அன்னிய ராட்சிக்கும், கொள்ளைக்கு மிடங்கொடாமல் சுதந்திர பூமியாக விளங்கியதனால்தான், உதயபூமி உலகத்திலே பிரசித்தி பெற்று விளங்குகிற வல்லரசுகளான ஆங்கிலேயம், பிரான்ஸ் ஐக்கிய மாகாணங்கள் இவற்றோடு சரி சமமான கௌரவம் பெற்று நிற்கிறது. அதன் இளைஞரும், வாலிபரும் பள்ளியில் கற்கிறார்கள். போதுமான உணவும் உடையும் பெற்று, உலகத்தில் எந் நாட்டுக்கும் இளைக்காத சுகாதாரம் பொருந்தி யிருக்கிறது. அதன் ஆலைத் தொழில்கள் வளர் பிறை போல பெருகிக் கொண்டிருக்கின்றன. அதன் வியாபாரம் நடவாத நாடும் அதன் கப்பல்கள் செல்லாத நாடும் இல்லை யென்றே சொல்லலாம். அதன் பொருட் பெருக்கு எல்லாம் அதற்கே உரிமை யின்றி, வேறெந்த நாட்டுக்கும் உரிமை யில்லை. அமெரிக்காவாவது, ஐரோப்பிய நாடுகளி லொன்றாவது அந்நாட்டைப்பற்றி அடிமைப்படுத்தி அதன் ஜனங்களை நிராயுத பாணிகளாக்கி, அன்னிய ராட்சி ஏற்படுத்தி, அதன் பிரதான உத்தியோகங்களிலெல்லாம் அன்னியரை நியமுகம் செய்து, அதற்குக் கல்வி மறுத்துத் தன்னால் கூட்டக் குறைக்க முடியாமல் பணிந்தே தீரவேண்டிய விதிகளை யேற்படுத்தி அதன் அரசிறையை ஒரு சிறிதும் விடாமல் கைப்பற்றிக் கொண்டிருந்தால், தற்கால இந்தியாவின் அள

வுக்குமேல், இந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்க முடியாது. இவ்வளவுக்குத் தான் முடியுமோ என்னவோ? உதய பூமியைப் போல பாரத நாட்டுக்கும் சம கௌரவம் கொடுத்து நன்கு மதித்து, தன்பொருட் பெருக்கை தன் நன்மைக்கே செலவு செய்து கொள்ளவும், தன்னறிவுக்கும் இயற்கைக்கும் தக்கபடி முன்னேற்றம் அடையும் சுதந்திரமும் கொடுத்திருந்தால், சிறிதும் தாழாத அறிவும், மிகவும் பெருகியிருக்கும் இயற்கை வளங்களும், கைத்தொழில் வியாபாரம் இவற்றில் வெகு காலமாக மேம்பட்டு விளங்கிய அனுபவமும், இன்னும் பற்பல வசதிகளும் அமையப் பெற்ற இந்நாடு, உலகத்திலே குறைந்தது உதய பூமிக்குச் சமமான பெருமையும் நன்மதிப்பும் பெற்றிருக்கு மென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. 'தனிமனிதரைப் போல ஒரு நாட்டாருள்ளும், வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும், செயற்கரிய செய்கைக்கும் இன்றியமையாத காரணம் சுதந்திரமே. எவ்விடத்தும் வளர்ச்சி யின்மைக்கும், பிற்போக்குக்கும அழிவுக்கும் அடிமைத்தனம் காரணம்' என்று உலகத்துக்குப் பனமுறையும் சரித்திர மெல்லாம் முழங்குகிற உண்மையைத்தான், தற்கால உதயபூமி பாரத வர்ஷ வரலாறுகள் ஒரே முகமாய் போதிக்கின்றன. தமிழ் நாட்டுப் பாரதியார், இவ்வுண்மையினை தமதருமைத் திருவாக்கால், எவ்வளவு அழகாக வெளியிட்டிருக்கிறார்.!

*''தேவி! நின் னொளி பெறாத தேசமோர் தேசமாமோ?
ஆவி யங்குண்டோ? செம்மை யறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவிய நூல்கள் ஞானக் கலைகள், வேதங்களுண்டோ?
பாவிய ரன்றோ? உன்றன் பாலனம் படைத்திலாதார்.''.

விநோதக் குறிப்புகள்.

சட்டசபைத் தேர்தலில் தனக்கே 'ஓட்டு'க்கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீமான் சுப்பையர் ஜனங்களைக் கேட்டுக்

* தேவி — சுதந்திரதேவி.

கொண்ட பொழுது கதர்தான் அணிந்திருந்தார். ஆனால் தேர் தலில் வெற்றி கிடைத்தபின் சட்டசபைக் கூட்டத்திற்குப் போகும் பொழுது தனக்கு மந்திரி வேலையாவதற்குக் கதர் தடையாயிருக்குமென்று, சீமைத் துணியில் கால்சட்டை முதலியன தைத்துக் கொண்டுபோக எண்ணி தையல்காரனிடம் உத்திரவு செய்தார். அவன் கொடுத்த மூட்டையை வாங்கிக் கொண்டு மதுரையிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டார். சென்னைக்கு அருகில் ரயில் சென்றபொழுது தன் கதர் உடைகளைக் கழற்றி அவசரமாய் வெளியே எறிந்துவிட்டு மூட்டையை அவிழ்த்து சட்டைகளை எடுத்தார். அந்தோ! கால்சட்டை வைக்க மறந்துவிட்டான் மேஸ்திரி! சென்னையில் இதர சட்டசபை அங்கத்தினர் எவ்வளவு கூப்பிட்டாலும் காதில் வாங்காது அய்யர் ஓடினார். எங்கு? ஜவுளிக் கடைக்கு.

* * *

பழனியிலிருந்து வந்த வியாபாரி கிராமத்தில் ஜனங்களுக்கு எவ்வளவு சொல்லியும் அவன் மருந்துகளை வாங்க ஆள் கிடைக்கவில்லை. கடைசியாக மாலையில் தெரு மூலையில் நின்று கொண்டு ஒரு பிரசங்கம் செய்தான். "நான் என் சொந்த ஊராகிய இவ்வூருக்கு உழைக்காமல் வேறு எதற்குப் பாடுபட வேண்டும். மகாஜனங்களே! இன்னும் ஐந்து நிமிஷத்தில் இங்கு வந்து கூடும் ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் ரூ 5 இனம் கொடுக்கப்போகிறேன்' என்றான். உடனே ஏராளமான ஜனங்கள் கூடிவிட்டனர். 5 நிமிஷம் கழிந்ததும் ஒவ்வொருவரும் அவன் வாயையும் கையையும் பாத்துக் கொண்டு நின்றனர். வியாபாரி, "சகோதர ஜனங்களே! சர்வ ரோகங்களுக்கும் எதிரியான கைகண்ட மருந்து ஒன்று என்னிடம் இருக்கிறது. அது ரூ 100 கொடுத்தாலும் கிடையாது. வழக்கமாய் நான் அதை ரூ 5—2—0 க்கு விற்றுவருகிறேன். உங்களுக்காக அதை இரண்டணாவுக்குக் கொடுக்கிறேன். ரூ 5 லாபம். வந்த நோயும் பறந்துபோம்!" என்றான்.

* * *

சிறையில் அடைபட்டிருந்த தன் கணவனைப் பார்க்கச் சென்ற மனைவி— "நான் ஏதாவது ரொட்டி அனுப்பினால் சாப்பிடுவீர்களா?"

கைதி:— ரொட்டிக்குள்ளே என் குருதான் காந்தியின் தேகஸ்திதியைப் பற்றி எழுதிய கடிதமும் வைத்து அனுப்பினால் எத்தனை ரொட்டியானாலும் வாங்கிக் கொள்ளுகிறேன்.''

... ...

கிருஷ்ணதாஸ் எவ்வளவு சம்பாதித்தாலும் அவ்வளவையும் அவர் மனைவி விபரந் தெரியாமல் செலவு செய்துகொண்டே வந்தாள். ஒரு நாள் அவர் ரூ 100 எடுத்து மனைவி கையில் கொடுத்து செலவழித்ததையெல்லாம் ஒரு புஸ்தகத்தில் எழுதி வைக்கவேண்டும் என்று சொன்னார். ஒரு வாரம் சென்றபின் மனைவியை அழைத்து, ''நீ எழுதி வைத்திருக்கும் கணக்கை எடுத்து வா'' என்றார். மனைவி ஓடிச்சென்று அவருடைய பகவத் கீதையை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தாள். அதன் முதற் பக்கத்தில் ஒருமூலையில் ''ரூ. 100 முழுதும் செலவாய்விட்டது'' என்று எழுதப்பட்டிருந்தது.

கிருஷ்:—இப்படித்தான் ஒரே வரியில் கணக்கெழுதுவதோ? ஒரு தனி புஸ்தகத்தில் விபரமாய் நாள்தோறும் எழுத வல்லவா சொன்னேன்?

மனைவி:- சுருக்கமான கணக்குத்தானே என்று இப்படி எழுதினேன். 125 கொடுத்திருந்தால் ரூ 25 கொடுத்து ஒரு கணக்குப் பிள்ளை வைத்திருப்பேன்.

....

சென்னைபட்டணத்தில் வசித்து வந்த ஒரு பிரபு தன் குழந்தைகளுக்குப் புஸ்தகம் வாங்கவேண்டுமென்று கடைத் தெருவுக்குச் சென்றார். பெரும்பாலான கடைகள் அடைத்திருந்தன. அன்று இளவரசர் வரவேற்பு பகிஷ்கார தினம். இதை விசாரித்தறிந்த பிரபு மற்ற ஜனங்களோடு ஒத்துழையாமல் திறந்து வைத்திருந்த இரண்டொரு கடைகளில் புஸ்தகம் வாங்குதல் தகாதென்று எண்ணி வீடு திரும்பினார். வழியில் இரண்டு கம்பெனி குமஸ்தாக்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் அன்று கடை அடைத்திருந்தது காந்தி அன்று வருவதனால் என்றுசொன்னான். மற்றவன் இளவரசர் பம்பாயில் வந்து இறங்குவதனால் என்றான். வழியிற் சென்ற பிரபு, ''இளவரசருக்குக் கடை அடைப்பானேன்?'' என்று கேட்டார். ஒரு

குமஸ்தா, ''மரியாதைக்காக'' என்றான். பிரபு, ''காந்தி என்றீர்களே! அவர் யார்?'' என்றார். ''இவ்வளவுதானா? காந்தியையே தெரியாத உன்னிடம் எவண்டா அவதிப்படாது? போ'' என்று ஒருவன் சொல்லிக் கோபித்தான். பிரபு உண்மையான காந்தி சிஷ்யர். கடைசியாய்ச் சொல்லப்பட்ட விஷயத்தைக் கேட்ட அவர் மனம் கொண்ட உவகைக்கு எல்லையில்லை. (உண்மை நிகழ்ச்சி).

....

வியாதியாயிருந்த கனவானைக் கை பிடித்துப் பார்த்துவிட்டு வைத்தியர் அவர் மனைவியிடம் சென்று, '' அம்மா! காரியம் முடிந்துவிட்டது. உமது புருஷன் இறந்துவிட்டார்'' என்றார்.

மனைவி:- வெகுநாளாய் எதிர்பார்த்ததுதான். இவ்வளவு படித்த உம்மைப்போல டாக்டர் பார்த்தும் பயனில்லை.

நோயாளி:- நான் இறக்கவில்லை, இன்னும் உயிர்இருக்கிறது!

மனைவி:- எவ்வளவோ செலவழித்து இங்கிலீஷ் படித்த வைத்தியரே இறந்து போய்விட்டாயென்று சொல்லிவிட்டார். நீ அவரைவிடப் படித்தவனோ? 5 வருஷத்திற்கு முன்னே இறந்துபோன உன் மூத்த மனைவியும் சாகவில்லையென்று சொல்லி அவளையும் கொணர்ந்து விடுவாய் போலிருக்கிறதே!

... .

ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாத வாழ்வினால் நோய்கள் வந்து எச்சரிக்கின்றன. நோய்கள் நமக்கு நன்மை விளைக்கவே வருகின்றன, துன்புறுத்தவன்று. உபவாசத்தினாலும், நல்ல காற்றினாலும், இயற்கை வாழ்வினாலும் அனேகவியாதிகள் குணமாய் விடுகின்றன. ஆனால் இடையில் வைத்தியர்கள் வந்து மருந்து கொடுத்துக் குணப்படுத்துவதாய்ச் சொல்லுகிறார்கள். நோய்கள் உரிய காலம் கழிந்த பின்பு தாமே போய்விடுகின்றன. கடவுள் தான் இயற்கையின் மூலமாய் வியாதியைக் குணப்படுத்துகிறார்; ஆனால் வைத்தியர் ஊதியப் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்.

... ...

உலகில் பணமுடைய செல்வர் அதிகமாகப்புசித்து ஆடம்பர வாழ்வு வாழ்ந்து அடிக்கடி நோய்வாய்ப் படுகின்றனர். ஏழைகள் இரவு பகலாய் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுப்

போதிய கஞ்சி கிடையாமல் தவிக்கின்றனர். ஒருபக்கம் அரசன்; மற்றொருபக்கம் ஆண்டி! எளியவன் வேண்டுவது உணவு, பணக்காரன் வேண்டுவது (அதிகமாய்ப் புசிக்கப்) பசி.

... ...

கடவுள் உலகத்தை சிருஷ்டித்தார், சாத்தன் சமையல்காரர்களை சிருஷ்டித்தான்.

மனிதர் தங்கள் புதைகுழிகளைத் தங்கள் பல்லாலேயே வெட்டிக்கொள்ளுகிறார்கள். (அனேக மனிதர் மிக முக்கியமான அவயமாகிய பல்லைக் கவனியாமல் அழுக்கு, புழுக்கள் வந்து அடையும்படி வைத்துக்கொண்டு நோயுற்று, பல் காரணமாகவே மரணம் அடைகின்றனர்.)

மனிதர் இறப்பதில்லை, தம்மைத் தாமே கொன்றுகொள்ளுகிறார்கள். (இயற்கைக்கு மாறுபட்ட ஆடம்பர, சுகாதாரமற்ற வாழ்க்கையினால் மனிதர் அகால மரணம் அடைகின்றனர். நேராக வாழ்ந்தால் வெகு நாள் ஜீவிக்க இயலும்.)

... ...

வைத்தியர்:- அம்மா! உம்முடைய புருஷரை இரவில் தூக்கத்தில் பேசாமல் இருக்கச் செய்ய என்னால் முடியாது.

மனைவி:- அப்படியானால், அவர் பேசுவதைத் தெளிவாயாவது பேசச்செய்ய முடியாதா?

திரு. வ. வெ. சு. அய்யர்.

“அடிமைப்பட்ட முதல் நாளே அடிமை தன் ஆண்மைக்குரிய நற்குணத்தில் செம்பாதியை யிழந்து விடுகிறான்” என்ற கிரேக்க கவியின் வாக்குப்படி தன் வீரம், தர்மம், குண நலம் ஆகிய பலவற்றையு மிழந்து செயல், வாக்கு எண்ணத்திலும்கூட அடிமைப்பட்டுக் கிடக்கும் இவ்வாரிய நாட்டை, அடிமைத்தளையை யகற்றி மண்ணில் விளங்கும் விண்ணாடாக வாக்கவேண்டுமென்று உழைத்த தலையாய வீரர்களில் அய்யர் ஒருவர். கல்விக் களஞ்சியமாய், தங்கம் நிறுக்கும் தராசுபோன்ற இலக்கணியாய், கேட்பாரைப் பிணிக்குந் தகையதான சம்பாஷணையுடன் அவர் இரவும் பகலும் தியாகமூர்த்தியாய் நின்று உழைத்து வந்தார் பேராசிரியர்களும் கவிகளும் சோலையில் திரிந்து மலரொளி

கண்டும், தென்றலையணைந்தும், குயிலிசை கேட்டும் இயற்கையுடன் கலந்து களித்தும், வசனமாயும் கவியாயும் உலகிற்கு அள்ளிக்கொட்டுவார்கள். அவர்களைச்சோலையிலிருந்து வெளியே கொணர்ந்து ராஜீயமென்னும் பாலையில் நிறுத்திக் கையிலிருக்கும் எழுதுகோலைப் பிடுங்கி யெறிந்துவிட்டு, வில்லையும் தூணியையும் கொடுத்துப் போர் புரியச் சொன்னால் அவர்கள் என்ன செய்வார்கள்? ஆனால் அய்யர் வில்லுக்கும் பேனாவுக்கும் வஞ்சனையின்றிச் சரியான நியாயத்தைச் செய்திருக்கிறார். அய்யர் வாழ்க்கை போர் வீரனாயும் ஆசிரியனாயுமுள்ள இரு பிரிவிலும் பெரும் புகழ்க்கு உரியதாயிருக்கின்றது.

ஆசிரியர் அன்னையின் பலிபீடத்தில் எந்த நேரத்திலும் சமர்ப்பிக்கும் பொருட்டுத் தன் சரீரத்தைக் கற்போன்ற திண்ணியதாய் வளர்த்து வைத்திருந்தார். தடித்திருந்த நீளமான கதராடையை இடையிலும் மேலும் அணிந்துகொண்டு விளங்கும் அவரைப் பார்த்தால், குன்றும், அதன் மேலிருந்து மடிந்து மடிந்துவிழும் அருவிபோலும் தோற்றுவார். அய்யர் சரீரத்தைக் கண்ட பலர் அது ஓர் அடக்கப்பட்ட எரிமலை யென்று சொல்லுவார்கள். அவர் திருமுகம் வெகுகம்பீரமான பார்வையுடன்கூடி வீரத்திற்கு நிலைக்களமாயிருக்கும். அவர் உள்ளத்திலிருந்த ஏதோ ஓர் எண்ணம் கண்வழியே ஒளிபரப்பி ஒழுகுவதுபோலத் தோன்றும். துடித்துக் கொண்டிருக்கும் அந்த மீசையைத்தான் பாருங்கள்! அம்ம! என்ன செவ்விய காக்ஷி! எதைக் கேட்கினும் ஆசிரியர் இடையே புன்னகை செய்து கொண்டேயிருப்பார். இத்தகைய அருளுருவில் முன்னர் பலாத்கார எண்ணமும் தணியாக் கோபமும் எவ்வாறு தங்கி யிருந்தனவோ தெரியவில்லை! சுதந்தரி தன்னைக் காதலித்தவர்களை என்ன வேண்டுமாயினும் செய்யத் தூண்டுவாளன்றோ?

ஆசிரியர் வ. வெ. சு. அய்யரின் வாழ்க்கை முழுதுமே பெரும் பெரும் ஆதர்சங்களைப் பற்றியே நிகழ்ந்திருக்கின்றது. அன்னார் தம் வாழ்க்கை முழுவதையும் தேசமாதாவிற்கு அர்ப்பணம் செய்துவிட்ட பெரிய தேசாபிமானச் செல்வர். முற்காலத்தில் எதுவரினும் கலங்காது பலாத்காரத்தினால் தம் கோரிக்கையை நிறைவேற்ற எண்ணி யுழைத்ததைவிட, அய்யர் பிற்கா

லத்தில் அஹிம்சையை ஓர் வழியாக மட்டுமன்றிக் கொள்கையாகவும் கைப்பற்றிச் செந்தண்மை பூண்டொழுகியது, அவர் பண்டைய வீரம் மாசுற்றதினாலன்று; ஆனால் வீரமிகுதியினால்தான். சுருங்கச் சொல்லின் தமிழணங்கின் தவமைந்தராகிய அய்யர், வரகனேரியில் பார்ப்பனர் குலத்தில் தோன்றியிருப்பினும் ஒரு மறவன் அல்லது ராஜபுத்திரனின் இதயத்தையும் சரீரத்தையும் பெற்று விளங்கினார். இவ் வீரன் திருநாமம் என்றும் வாழ்க. வீரமும் வாழ்வும் நமக்கு நல் வழி காட்டுக.

ஸ்ரீ சுப்பிரமணிய சிவம்.

(உ௩௨-ம் பக்கத்தொடர்.)

பாழுங் கோயில்களுக்கு (எவரும் கவனியாது கிடக்கும் கோயில்களுக்கு) உற்சவம் நடத்துவதாக ஆரம்பித்து, பையன்களைச் சேர்த்துக் கொண்டு, வீட்டுக்கு வீடு சென்று வரி வசூலிப்பார். அடிக்கடி இம்மாதிரி செய்வார். தெருவார் கொடுக்காவிட்டால், சிறு சிறு குச்சிகள் எடுத்து ஆப்புகள் சீவி ஒவ்வொரு வீட்டின் வெளிக்கதவின் சங்கிலியை, இரவிலே எல்லோரும் தூங்கின பின்னர், இழுத்துமாட்டி, ஆப்புப்போட்டு விடும்படி செய்வார். மறுநாட் காலையிலே வீட்டிலேயுள்ள பெண்கள் வெளியே சாணம் தெளிப்பதற்கு வந்து பார்த்தால், கதவு திறக்க முடியாது கஷ்டப்படுவார்கள். எவரிடத்திலாவது அதிக பகைமை கொண்டுவிட்டால், புஸ்தகங்களைக் கிழித்து, தனி தனி எழுத்துக்களைக் கத்தரித்து, வாயில்வந்த மாதிரியெல்லாம் திட்டினபடி, கோர்த்து ஒரு பெரிய காகிதத்திலே யொட்டி, அவருடைய வீட்டு வெளிச் சுவற்றில் ஒட்டிவிடும்படி செய்துவிடுவார். இவருடைய துஷ்டத்தனம் பொறுக்க முடியாது சாதாரணமாக எல்லோரும் இவரைக்கண்டால் பயப்படுவார்கள்.

ஆனால், இந்த துஷ்டத்தனத்துடனே கூட சில நல்ல காரியங்களையும் செய்து வந்தார். எவரேனும் அநாதையாக மரித்துவிட்டால், பையன்களைக் கூட்டிக்கொண்டு அந்தப்பிணத்தை எடுத்துக் கொண்டு, அதற்கு வேண்டிய தகனக் கிரியைகளெல்லாம் செய்வதற்கு ஏற்பாடு செய்வார். திக்கில்லாமலிருக்கும் வியாதியஸ்தர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் விட்டு வேண்டிய

ஆதரவு அளிப்பார். பசியினாலோ, வியாதியினாலோ, அல்லது பிறரால் துன்புறுத்தப்பட்டோ கஷ்டப்படுபவர்கள் இவரிடம் வந்து முறையிட்டால், அச் சிறுவயதிலேயே அவர்களுக்குத் தம்மாலியன்ற சகாயம் செய்ய ஒருநாளும் தவறார்.

நிற்க, பொதுக் கூட்டங்களிலே பேசவேண்டு மென்ற ஆசை இவருக்கு எட்டாவது வகுப்பில் படிக்கும் பொழுதே யுண்டு. ஒரு நாள் சகல சாஸ்திர சம்பந்ந சாஸ்திரிகள் ஒருவர் வந்து பிரசங்கம் செய்தார். திருவனந்தபுரத்திலேயுள்ள 'பெரிய' மனிதர்கள் அனைவரும் வந்திருந்தனர். கூட்டமோ, மண்டபத்தில் நிற்பதற்குக்கூட இடமில்லை. பிரசங்கம் முடிந்தது. அக்கிராசனர் பேசியபின், பலர் எழுந்து அந்த சாஸ்திரிகளுக்கு வந்தனம் கூறினார்கள். இவர் எங்கோ ஒரு மூலையிலிருந்தவர் மட மட வென்று பிரசங்க மேடைக்கு வந்து, சுமார் அரைமணி நேரம் ஹிந்து மதத்தின் விசேஷத்தைப்பற்றிப் பேசி, கடைசியாக அந்த சாஸ்திரிகளுக்குப் பொதுஜனங்களின் சார்பாக வந்தனம் அளித்தார். எல்லோரும் பிரமித்துவிட்டார்கள். அக்கிராசனர் (இப்பொழு திருவநந்தபுரத்திலே உயர்தர நீதிஸ்தல நியாயாதிபதியா யிருக்கும் ஸ்ரீமான் கே. ஜி. சேஷய்யர்) இச் சிறுவாலிபர் ஒரு காலத்திலே தென்னிந்தியாவிலே பெயர் பெற்ற ஒரு வாக்சாலகராவர் என்று கூறி இவரைப் புகழ்ந்தார்.

இப்படி யிருக்கும் பொழுது, ஸ்ரீமத் ஸதானந்தஸ்வாமிகள் என்னும் ஒரு மகான் திருவநந்தபுரம் வந்து சேர்ந்தார். அவர் அவதூதராய், கௌபீனம் மாத்திரம் தரித்துக் கொண்டு, எப்பொழுதும் நிஷ்டாபரராய் விளங்கினார். கண்ணை விழிக்கும் பொழுது, எதிரில் பிக்ஷைக்காக என்ன வைக்கப்பட்டிருந்ததோ அதை யுண்டுவிட்டு, மறுபடியும் நிஷ்டையில் அமர்ந்துவிடுவார். அவரைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடத்தொடங்கினார்கள். சில சமயங்களிலே சுற்றியிருந்தவர்களுக்கு அவர் வேதாந்த சாஸ்திரத்தை யெடுத்துச் சரமாரியாகப் பொழிந்து கொடுப்பார். இப் பெரியாரைப்பற்றி ஸ்ரீ சிவம் கேள்விப் பட்டும், சுமார் இரண்டு மாதங்கள்வரை அவரிடம் செல்லவில்லை. பின்னர், அப் பெரியார் திருவநந்தபுரத்தி லிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள உள்ளூர் என்னும் கிராமத்திலிருக்கையில், திடீ

றென்று அவரிடம் போகவேண்டுமென்று ஒரு எண்ணம் உண்டாக, ஒரு நண்பரையும் அழைத்துக்கொண்டு அங்கு சென்று, ஸ்வாமிகளைக்கண்டு அன்றுமுழுதும் அங்கேயேயிருந்தார். அடிக்கடி ஸ்வாமிகளிடம் போவதும் வருவதுமாக இருந்து, கடைசியாக அவருடன் கூடவே எப்பொழுதும் இருக்க ஆரம்பித்தார். சாப்பிடுவதற்கு மாத்திரம் ஊட்டுப்பெறைக்கு வருவார். மற்ற சமயங்களிலெல்லாம் ஸ்வாமிகளுடனேயே இருப்பார். வரவர, இவருடைய மனமானது அத்தியாச்சர்யகரமாக மாறுதலடைய ஆரம்பித்தது பழைய சிநேகிதர்களை மெல்லமெல்ல விட்டுவிட்டார். அதிகமாக எவருடனும் பேசுவதில்லை. பழைய சிநேகிதப்பிள்ளைகள் இந்தமாறுதலைக்கண்டு ஆச்சர்யப்பட்டார்கள். ஆனால் இவரிடத்தில் அவர்களுக்கிருந்த மதிப்புமாத்திரம் மாறவில்லை. திருஷ்டாந்தமாக, திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி கோயிலிலே உற்சவம் நடந்துகொண்டிருந்தது. இவர் பகல் 12-மணிக்கு ஒருநாள் ஊட்டுப்பெறைக்கு சாப்பிடவந்தார். உற்சவமாகையால், விசேஷ சாப்பாடு, பெருங்கூட்டம் கூடியிருந்தது. இவர்ஒரு மூலையிலேபோய் சாப்பிட உட்கார்ந்தார். இலை போட்டாய்விட்டது; திடீரென்று பின்புறமிருந்து ஒருவன் இவரைக் கழுத்தைப் பிடித்துத்தள்ளி, ஒரு அடி ஓங்கியடித்துவிட்டான். காரணம், அந்த இடத்தில் தான் உட்கார்வதற்கென்று துணி விரித்துவிட்டுப் போயிருந்தானும். அந்த இடத்தில் இவர்போய் உட்கார்ந்து விட்டாராம். இவர் பேசாமல் எழுந்திருந்து வேறிடத்துக்குப்போய்விட்டார். இவருடைய பழைய சிநேகிதர்களில் ஒருவன் இதைப்பார்த்துவிட்டான். அவன் பரிமாறுகிறவன். அவன் ஓடிவந்து தன் கையில் இருந்த அகப்பையால் இவரையடித்தவனை ஒரு அடி யடித்தான். அவனைச் சேர்ந்தவர்கள் இவனையடித்தார்கள். உடனே அங்கு பரிமாறுகிறவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள்; பெரிய ரணகளமாய் விட்டது. இவ்வளவுக்கும் இவர் ஒன்றும் பேசாமல், ஒதுங்கி நின்றுகொண்டிருந்தார்.

பின்னர், இவர் ஷைஸ்வாமிகளுடனும் தனித்தும் கன்யாகுமரி முதல் கள்ளிக்கோட்டை வரையில் சஞ்சாரம் செய்தார். இவர் ஷை ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்று ராஜயோகத்தை

நெடுங்காலம் அப்பியசித்தார். இவருக்குள்ள வேதாந்த அறிவும் அனுபவமும் இவருடைய 'சச்சிதானந்தசிவ'த்தில் நன்கு விளங்கக்காணலாம்.

இவருக்கு ஒரு வியாதிகண்டு, உடம்பெல்லாம் சிறு சிறு புண்களாக வெடித்து அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தார்; மல ஜல பாதையும் படுக்கையிலே ஆகிக்கொண்டிருந்தது. அப்பொழுதும் இவர் தமது வீட்டுக்குப் போவதில்லை ஒரு நாள் இவருக்கு மூத்திரம் போகாமல் வயிறு பெருத்து மிகவும் கஷ்டப்படலானார். நான்கு மணி நேரம்வரையில் மிகவும் சிரமப்பட்டு, அநேக வைத்திய நிபுணர்களின் சிகிச்சையின் மேல் மூத்திரம் வெளிவந்தது. மறுநாள் இவருடைய தாயார் இவரருகில் வந்து இவரை வீட்டுக்கு வரும்படி எவ்வளவோ மன்றாடி வேண்டியும் இவர் இணங்காது, "சுக சரீரத்துடன் நன்றாயிருந்த பொழுது, வீட்டுக்கு வாராது வெளியே சுற்றிக்கொண்டிருந்தேன். இப்பொழுது, வியாதியில் படுத்துவிட்டபொழுது வீட்டுக்குவந்தால், 'வியாதியில் விழுந்தான், வீட்டுக்குவந்தான்' என்று பலரும் பரிகசிக்க மாட்டார்களா? ஆதலால், தெருவிலே என்னைத் தூக்கிப் போட்டுவிட்டாலும் நான் வீட்டுக்கு வரப்போவதில்லை" என்று மறுமொழிகூறினார். தாயார் கிணற்றிலே விழுந்துவிடுவே னென்றார், சமுத்திரத்திலே குதித்துவிடுவேனென்றார். என்னசொல்லியும் பயனில்லை, கடைசியாக, இவருடைய சரீரம் ஒருவாறு சொஸ்தமடைய இவர் ஸ்வாமிகளுடனே திருக்குற்றாலம் சென்று அருவியிலே ஸ்நானம் செய்துகொண்டு சுமார் ஆறுமாத காலம்வரையில் அங்கேயே இருந்தார்.

இவருக்கு குடும்பத்தினிடத்திலே பற்றேயில்லாது போய்விட்டது. இவருடைய மாமியாரும் மனைவியும் இவரை எப்படியாவது குடும்பத்தினுள்ளே ஆழ்த்திவிட வேண்டுமென்று எவ்வளவு முயற்சித்தும், அவர்களால் அப்படிச் செய்யமுடியவில்லை. "கானவர் வலையில்பட்டுக் கைதப்பியோடும் மான்போல்" இவர் பந்துக்களினின்றும் தப்பித்து ஓடிவிடுவார். அவர்கள் பிடிப்பதற்காகத் துரத்த, இவர் தப்பித்துக்கொள்வதற்காக ஓட, இம்மாதிரி ஊருக்கு ஊர் அவர்களும் இவரும் அலைந்து திரிந்து மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். சந்நியாசி

கொண்டுவிட்டதினுல், சம்சாரத்தினிடத் ...து போய்விட்டதே, என்செய்வது? என்று ...ர்ருர் வருந்தி இவரை ஸ்ரீவில்லிபுத்தூருக்கு ... அங்கே அப்பொழுது போலீஸ் இன்ஸ்பெக்ட் ...வருடைய ஷட்டகர் ஸ்ரீமாந் வீரராகவய்யரிடத்தி ... இவரை ஏதேனும் வேலையி லமர்த்தும்படி கேட்டுக் கொண்டார்கள். அங்கு இவருக்கு சிவகாசி போலீஸ் அஸிஸ் டென்ட் சூப்பிரண்டு ஆபீசிலே ஒரு சிறிய குமாஸ்தா வேலை கிடைத்தது. இவருக்குச் சிறிதும் அங்கிருப்பதற்குப் பிடிக்க வில்லை. மகா சக்தியின் ஆக்ஞையும் வேருயிருந்தது. வேலையி லமர்ந்து மூன்று வாரத்துக்குள்ளாக, இவருடைய சரீரதிடத் தைப்பற்றி, வைத்திய நிபுணருடைய சாட்சிப் பத்திரம் வாங்கி வருமாறு இவர் திருநெல்வேலி ஜில்லா வைத்தியத் தலைமை யதிகாரியிடம் அனுப்பப் பட்டார். இவர் சுக சரீரியா இருந் தும் எக்காரணங்கொண்டோ இவருக்கு ஹிருதய வியாதி இருக் கிறதென்று வைத்தியர் சொன்னதுதான் தாமதம், இவர் திரும்ப சிவகாசிக்குப் போகவில்லை; நேரே திருவனந்தபுரத் துக்குத் திரும்பி வந்துவிட்டார். ஸ்வாமிகளுடைய மடந்தான், காலையிலே ஊர் சுற்றி பஜனைதான், மாலையிலே மூலைக்கு மூலை பிரசங்கங்கள்தான்; எப்பொழு பார்த்தாலும் ஈச்வர நாமோச் சாரணம்தான் பெற்றோர் இவரைப்பிடித்து ஆழ்த்தப்பார்த்தும் பலிக்கவில்லை. ஐயோ! பாவம்!! இவருடைய பெற்றோர் அந்த ஸ்வாமிகளைத் திட்டாத நாள் கிடையாது. ஒரு நாள் இவருடைய மாதா ஸ்வாமிகளிடம் சென்று "ஐயோ! நான் தவங்கிடந்து பெற்ற பிள்ளையாயிற்றே! அவனைத் தாங்கள் இப்படிச் செய்து விடலாமா?" என்று கேட்க, ஸ்வாமிகள் "அம்மா! அதனுல்தான அந்தப் பிள்ளைக்கு புத்தி இவ்வாறு(நல்வழியில்)போகிறது. இல் லாவிட்டால், துஷ்டனுகப் போயிருக்கமாட்டானு?" என்ருர்.

திருநெல்வேலிக்கடுத்த நரசிங்கநல்லூர் என்னும் கிராமத் திலே கூடிய சாதுசங்க மகாசபை யொன்றில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு முன்னிலையில் இவர் செய்த வேதாந்த பிரசங் கத்தைக் கேட்டு ஆனந்திக்காதவர்கள் இல்லை.

(தொடரும்)

மறைந்து திரும்பிய கமலம்.

ஓர் சிறு கதை.

(திரு. தி. ஜ. ரேங்கனாதன்)

அது நெல்லூர் பசு. மிகவும் சாந்தமான பிராணி. முத்துப் பிள்ளை புதிதாய் மாயவரத்திலிருந்து கொண்டு வந்திருக்கும் தேவடியாள் வனஜாவின் மாடு அது. அது குழந்தைகளை ஒன்றும் செய்யாது. அது எப்பொழுதும் அவிழ்த்து விடப்பட்டேயிருக்கும். அதைக் கட்டுவதுமில்லை; கறப்பதுமில்லை. அந்த நெல்லூர் பசு தெருவில் நின்று கொண்டிருந்தது. அதை ஊட்டிக்கொண்டிருந்தது, வைரத்தாலும் சிவப்பாலும் தங்கத்தாலும் நிறைக்சப்பட்டிருந்த ஒரு குழந்தை. எட்டநின்று கையைக் கொட்டி சிரித்துக்கொண்டு நின்றது மற்றோர் குழந்தை. அதற்கு நகையுமில்லை; துணியுமில்லை.

மாட்டை ஊட்டிய குழந்தை பணக்காரக் குழந்தை. அந்தக் குழந்தை மூத்துப்பிள்ளையின் மகள்தான். வயது நான்கு இருக்கும். நகைகள் ஒரு புறமிருக்க அதன் இடுப்பில் உடுத்தியிருந்த பட்டுப் பாவாடை மட்டில் இருபது ரூபாய் பெறும். குழந்தையின் பெயர் கமலம்.

ஊட்டப்பட்ட மாட்டுக்கு, அது இதமாய் இருந்ததுபோலிருக்கிறது, அது அசையாமல் நின்றது. மற்றொரு குழந்தைக்கு இது பரிகாசமாய் இருந்ததோ, அல்லது பயமாய்த்தான் இருந்ததோ, அது கிட்ட நெருங்காமல், எட்ட இருந்த வண்ணமே கையைக் கொட்டி மிகவும் பலமாயச் சிரித்துக்கொண்டு நின்றது. அதற்கும் வயது சுமார் நான்கு தானிருக்கும். அதுவும் பெண் குழந்தைதான். அது கோடிவீட்டு அண்ணாவுப் பிள்ளையின் செல்லக் குழந்தை. பெயர் மங்களம்.

கமலம் மாட்டை ஊட்டியது ஒரு அதிசயமாய் விட்டது. தெரு முழுக்க வந்து விட்டார்கள் இதைப் பார்ப்பதற்கு. ஆ! ஆ! என்ன சமர்த்து, என்ன சமர்த்து", என்று எல்லோரும் வியந்தார்கள் கமலத்தை. மாடு கூட்டத்தைக் கண்டு கொஞ்சம் வெறித்து நகர்ந்தது. கமலம் நகராமல் நின்றாள். மங்களம் ஓடி வந்து அப்புறம் இழுத்துச் சென்றாள் .கமலத்தை. கமலம் கத்தினாள்.

கமல ... றுவர் முத்தங்கொடுத்தார். அவர் கை ... பிடுங்கிக் கொஞ்சினர். ஏழை மங்களத்தை ... ம்பிக்கூடப் பார்க்கவில்லை. அது அவளுக்குக்கொஞ்சம் ...த்தமாகவே இருந்ததோஎன்னவோ? குழந்தைக்கு என்ன வருத்தம் தெரியப்போகிறது? கிடு. கிடு என்று அவள் வீட்டுக்கு ஓடிப்போய்விட்டாள்.

கமலம் மாட்டை ஊட்டிய அதிசயம்தான் அன்று முழுக் கத்தெருவில் பேச்சு.

மறுநாள் காலையில் இன்னோர் அதிசயம் நடந்தது. “சோத்துக்குத் தயிர் போட்டால்தான் சோறு தின்பேன்” என்றாளாம் நாலு வயதுக் கமலம். அவ்வளவு பேசத் தெரிந்து விட்டது அவளுக்கு. இந்த அதிசயம் அன்று தினத்திற்குப் போதியதாயிருந்தது. முத்துப் பிள்ளையின் பணத்தை அளக்க இது போதாதா?

இளவரசர் காலையில் குதிரையிலிருந்து விழுந்தார். மறு தினம், அது பத்திரிகைகளிலெல்லாம் ஐந்து கண்டத்திலும் ஒலித்தது. இளவரசர் தாமே மோட்டாரை ஓட்டியபொழுது 'டயர்' வெடித்துப் போயிற்று. ராய்ட்டர் அதை உலக முழுவதும் பரப்பியது. இந்த அதிசயங்களைப் பத்திரிகைகள் மூன்று, 'மகுடங்' (ஹெட்டிங்) களுடன் பதிப்பித்தன. முத்துப் பிள்ளை மகிழஞ்சேரிக்கு இராஜா; கமலம் அதற்கு இளவரசி; வம்புப் பேச்சுத்தான் பத்திரிகைகள். இப்பத்திரிகைகளிலே கமலத்தின் ஒவ்வொரு அதிசயச்செயல்களும் பேச்சுக்களும் இடம் பெற்று வந்தன. இதில் முரண்பாடு ஒன்றுமில்லையே?

மகிழஞ்சேரி வெள்ளாளர் கிராமம். சுமார் முப்பது வெள்ளாளர் வீடுகளிருந்தன. தெரு இரண்டு சாரி. சாரி ஒன்றுக்குப் பதினைந்து வீடுகள். முத்துப்பிள்ளைக்கு ஊரில் 'மைனர்' என்று பெயர். ஆகவே, அவர் வீட்டை மைனர் வீடு என்பார்கள்.

முத்துப்பிள்ளைக்கு அம்மாள் அப்பா இருவரும் இறந்து போய்விட்டார்கள். அவருக்குக் கூடப்பிறந்தவர்கள் யாருமில்லை. அவர் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. பெருத்த குடித்தனக்காரர்.

முத்துப் பிள்ளைக்குப் [illegible] கலியாணம் ஆகிவிட்டது. ரத்தினத்தை ஊ[illegible] கூறினார்கள். ரத்தினம் முத்துப்பிள்ளையின் மனை[illegible]தால் தானென்ன, பச்சை பச்சையாய், அங்கம் அங்கமாய், கொஞ்சம்கூடக் கூச்சமென்பதில்லாமல், பெண்களின் அழகை வர்ணிக்கும் அதிவீர ராமனுயிருந்தாலும் சரிதான், 'அன்ன மன்ன கழுத்து; முத்தின் வரிசைப் பற்கள்' என்று பக்கத்திற்கு ஒரு தடவை வர்ணிக்கும் 'ரெயினல்ட்' டாயிருந்தாலும் சரிதான்' ரத்தினத்தை அழகி அல்லவென்று சொல்ல முடியாது. நிறம் சிவப்பு இல்லை. அதனால் என்ன மோசம்? அழகிய மான் நிறம், சிரித்த முகம், எழில் அமைந்த வதனம். அதிக உயரமுமல்ல; அதிகக் குட்டையுமல்ல; அதிகப் பருமனுமல்ல; அதிக ஒல்லியும் அல்ல. ரத்தினம் அழகிதான். அழகியே அவள்.

கலியாணமாய்க் கமலம் பிறந்த வரையில் முத்துப்பிள்ளை ரத்தினத்தினிடம் மிகவும் பிரியமாயிருந்தார். என்னவோ கெட்ட காலம், அதற்குப்பிறகு ரத்தினத்தினிடம் முத்துப்பிள்ளையின் பிரியம் நிரம்பக் குறைந்துவிட்டது. கமலம் பிறக்கும் வரையில் முத்துப்பிள்ளை யாரோடு எதைப்பற்றிப்பேசிக்கொண்டிருந்தாலும், 'நம் சம்சாரம் இப்படிச் சொல்கிறாள்' என்று சில தடவை கூறுவதில் அவருக்கு மிகவும் சந்தோஷம். அதிகப் பிரியத்திலிருந்து அதிக வெறுப்புண்டாய் விடுமாம். ரத்தினத்தினிடம் முத்துப்பிள்ளையின் பிரியம் நிரம்பக் குறைந்து போனதற்கு இதுவே காரணமாயிருக்கலாம். அது என்னவோ ரத்தினத்தினிடம் முத்துப்பிள்ளைக்கு ஆசை குறைந்து போனதுமட்டிலுமல்ல, மிகுந்த வெறுப்புக்கூட உண்டாய்விட்டது.

ஆரம்பத்தில் அவர் அடிக்கடி வெளியூர்களுக்கு, முக்கியமாய், மன்னார்குடி, கும்பகோணம், மாயவரம், தஞ்சாவூர் முதலிய இடங்களுக்குப் போய் வருவதைப்பற்றி ஊரில் வதந்திகள் உண்டாயின. அவர் சுமைனர் லீலையில் இறங்கி விட்டார் என்பது ஊர்வம்பு. பிறகு, அவர் சிலகாலம் ஊரிலேயே தங்காமல் வெளியூரிலேயே இருந்தார். இப்பொழுது தேவடியாள் வனஜாவை ஊருக்கே, தன் வீட்டுக்கே அழைத்துவந்து, அவளுடனேயே குடித்தனம் செய்ய ஆரம்பித்தார். ரத்தினத்திற்

கும் முத்துப் பிள்ளைக்கும் வெளிப்பட ஒரு சண்டையுமில்லை, சச்சரவுமில்லை. திடீரென்று அவளுடன் பேசுவதை நிறுத்தினார். அவள் சோறு பரிமாறினால் வாய் பேசாமல் சாப்பிடுவார். இப்பொழுது அதுவுமில்லை. இப்பொழுதெல்லாம் வனஜாவின் அம்மாள்தான். ரத்தினம் ஒதுக்கி வைக்கப்பட்டாள். ரத்தினத்திற்கு வீட்டில் இடமில்லை. அடுத்த வீடும் முத்துப்பிள்ளையின் வீடுதான். அதில் ரத்தினத்திற்கு இரண்டு அறைகள் கொடுக்கப்பட்டன. சமையல், சாப்பாடு, சாமான்கள்வைத்துக்கொள்வது, படுக்கை எல்லாம் அந்த இரண்டு அறைகளுக்குள் தான். ரத்தினத்திற்கு ஒரு மாதத்துக்கு வேண்டிய அரிசியும் பதினைந்து ரூபா பணமும் வனஜா படியாக மாத முதலிலேயே கொடுத்து விடுவாள். ரத்தினம் வனஜாவை 'அக்காள்' என்று கூப்பிடுவாள். வனஜா ரத்தினத்தை ஒரு விதமாகவும் அழைப்பதில்லை; ஏது பேச்சோ அதோடு கணக்காய் நின்று விடுவாளே தவிர, ஒரு வித முறையும் பாராட்டி ரத்தினத்தை அழைக்கமாட்டாள். ரத்தினத்துடன் அதிகமாகப் பேசுவதில் கூட வனஜாவிற்கு இஷ்டமில்லை. ரத்தினமோ, தன் வாழ்வைப் பிடுங்கிக்கொண்ட வனஜாவிடம் பேச அடிக்கடி முயலுவாள்; வனஜா லக்ஷியம் செய்வதில்லை.

ரோஜாச்செடி முள் நிறைந்தது; செடியைக் கண்டு பயந்து ஒதுங்கி நிற்பது நம் வழக்கம். அதில் பூத்த மலரைப் பறித்து நம்மை அலங்கரித்துக் கொள்ளுவோம். ரத்தினத்தைக் கண்டு வெறுக்கத் தொடங்கினார் முத்துப்பிள்ளை. கமலத்தினிடம் அவர் அளவற்ற அன்பு செலுத்தலானார். வனஜாவிடம் ஒரு மாமிச இச்சை; கமலத்தினிடம், களங்கமற்ற, கரைகடந்த ஒருவாஞ்சை.

தமது அன்பிற்குரியது, தமது வெறுப்பிற் குரியவரிடம் இருக்க மனம் பொறுமை பெரும்பாலான மனிதரது இயற்கை. கமலம் ரத்தினத்திடமிருக்க, முத்துப் பிள்ளைக்கு மனம் இல்லை. கமலத்தைத்தாயினிடமிருந்தும் பிரித்துவிட்டார் முத்துப்பிள்ளை அவளைத் தம்முடன் வைத்துக்கொண்டார் கமலத்தை வனஜாவும் கொஞ்சினாள். நாலு வயது நிறையாத கமலத்துக்கு, ரத்தினத்தின் வீட்டுக்குப் போகக்கூடாது, அவளோடு பேசக்கூடாது என்ற பல கடுமையான விதிகள். கமலமும் தாயைப்பற்றி அதிக

அக்கறை கொள்ளவில்லை. கமலத்திற்கு யார் 'பெப்பர் மிண்டு' கொடுக்கிறார்களோ அவர்கள் போதும்; வேறு ஒருவரும் வேண்டாம். வனஜா கமலத்திற்கு ஒவ்வொரு நாளும் எவ்வளவோ 'பெப்பர்மெண்டு' வாங்கிக் கொடுப்பாள். "எடுப்பார் கைப் பிள்ளை" என்ற பழமொழி இவ்விடத்தில் 'உள்ளங்கை நெல்லிக் கனி' போல் விளங்குகிறது. வேறு என்ன வேண்டும் கமலத்திற்கு, வனஜா போதாதா?

வனஜா தான் கமலத்திற்கு அம்மா; அப்படிப்பழக்கி வைக்கப்பட்டாள் கமலம்.

(தொடரும்)

தமிழ்ப் பெருமக்கள்.

(ஆசிரியர் திரு. ராமசுப்பிரமணிய நாவலர்.)

உலகில் பல்வேறு வகைப்பட்ட மொழிகள் நிலவுவனவாயுள்ளன. அவற்றுள்ளும் பெரும்பான்மையோரால் அகடைக் கப்பட்டன சிலவே நந்தமிழ் மொழியானது தமிழ் மக்களால் பெரிதும் பேணப்படுவ தொன்றும். ஈண்டு நாம் சூட்டிய தலைப் பெயர் அத்தமிழ் மொழியில் வல்லுநராய்ப் பெருநூல்களை இயற்றி வைத்துத் தம் புகழுடம்பை நிறீஇய பெரும் புலவரைக் குறிக்குமென்க, நந்தமிழ்ப் பெருமக்கள் நமது வழக்க ஒழுக்கங்களைத் தம் நுண்ணறிவ னாய்ந்துணர்ந்து பிற்காலத்தும் நமக்குப்பயன்படுமாறு பற்பல கருத்துக்களை அமைத்து நூல்கள் இயற்றியுள்ளனர். இத்தன்மை அவரானியற்றப்பட்ட நூல்களை ஆராயுமிடத்து விளங்குமாறுணர்க முதன் முதல் தெய்வத் திருக்குறளிற் கண்டவற்றிற் சிலவற்றை ஈண்டுக் காண்பாம்.

நந்தமிழ் மக்கள் இறைவனது உண்மையை எங்ஙனமுணர்ந்தனர் என்பதும் எவ்வாறு வழிபட்டன ரென்பதும் நாயனார் இரண்டொரு குறட்பாக்களாற் குறிப்பெறக் கூறியருளினர். அத்தன்மை, தமிழர் கூற்றுக்கு ஒவ்வுமென்பது மாண்டுடை யுணர்க.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

இதனால் உலகிற் காதி காரணன் இறைவன் என்பதுணர்த்தியவா றறிக. ஏனையோர்க்கும் இஃதொக்குமென்க. ஈண்டு, அகர மெழுத்துக் கட்கெல்லாம் முதனிற்பது மன்றி உயிரெழுத்துக்கட்கெல்லா முயிராயு நிற்பது காண்க. இறைவனு முயிர்க்குயிரா யிலகுந் தன்மையுடையனாமென்க. அகர மென்பது விகாரம் பெறாது இயல்பி னெழுவது போன்று இறைவனும் விகாரமின்றி இயல்பினுள்ளா னென்க. விரிக்கிற் பெருகு மென்றொழிக.

நந்தமிழர் கொண்ட கல்வி அறிவுற்றுப் பெருமை கொண்டு பிறரைப் பழித்தற்குந் தம்மை உயர்த்தற்கு மன்று. அறிவின் பயன் அந்தமிலறிவனை உணர்ந் தவனடி பேணற்கேயாம். இக் கொள்கை கண்டன்றோ,

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின்.

என அருளப்பட்டது? வாலறிவனற்றா டொழாதார் தாம் பற்ற கல்விப் பயனடைந்தாரல்லர். இதனால், தமிழ் மக்கள் எத்துணைக் கல்வி யுடையராயினும் தெய்வ நம்பிக்கை யுடையர் எனபது பெறப்பட்டது. அன்றியும், வாலறிவனற்றாடொழுதார் கற்றதனாலாய பயன கொண்டாருமாவ ரென்க.

வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

மழைபானது உலகிற் கமிழ்த மென்றுணரும் தன்மைத்தெனவே அம்மழை யாவரானும் விரும்பப்படுந் தன்மையுடைத்து என்பதும் அமிழ்த மன்னத்தைப பேணிக் கோடல் வேண்டுமாகலின் அது பேணுந் தன்மைத்து என்பதும் குறிப்பாலுரைக்கப்பட்டன. இதனால், நந்தமிழர் மழை உலகில் வீழ்தற்குரிய செய்கைகளி னின்றனர் என்பது முணரக்கிடந்தது காண்க. இவ்வுண்மை "சிறப்போடு பூசனை செல்லாது வானம்—வறக்கு மேல வானோர்க்கு மீண்டு" எனவும் "தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்—வானம் வழங்கா தெனின்" எனவுங் கூறப்பட்டன கொண்டு உய்த்துணரத் தகும். சிறப்பும் பூசனையுந் தானமுந் தவமும் உலகில் நிலை பெற்றுள்ளன வென்பதும் அவை தமிழராற் பேணப்பட்டன வென்பதும் உணரற்பாலன.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை" "துறந்தார் பெருமை" என்பன முதலிய பாக்களான் நீத்தார் தன்மையைத் தமிழர்க்கு வற்புறுத்துவதூஉமன்றி அவரைத் துறவின்கட்சேறற்கு உரைகூறிய வாறுங் கண்டு கொள்க. இதனால், துறவடைந்து முத்திபெறுவதே இறுதிப்பயனெனக் காட்டியவாறு. இதனைப் பின்னரும் காண்பாம்.

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்.

இஃது அந்தணர் தன்மை காரணங்காட்டி யுணர்த்திய வாறு. மற்றோர்பால் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக வின்றியு மந்தணரெனத் தம்மைக் கூறிக் கொள்வாரையு மொரு வாற்றான் மறுத்தவாறுமாம். ஈண்டு அந்தண ரென்றது இக் காலத்து அந்தணர் அல்ல ரென்பதும் பெறப்பட்டது. அந்தணர் என்னுஞ் சொல் பிற நூல்களினும் முனிவர் அந்தமி லின்பத் தரும் பொருளைச் சிந்தையிற் கொண்டு பேணுவோர் என்னும் பொருள்படவே வருகின்றது. தமிழர்க் குணர்த்துவ தாகலின் அந்தணர் எனத் தமிழ்ச் சொல்லா னிறீஇனர். (அம் + தண் + அர் = அந்தணர் எனக் காண்க)

அன்பும் அதிகாரமும்.

ஈஸ்வர சிருஷ்டியில் ஆன்மகோடிகள் அவர் தம் வினைவலியால் உயர்வு தாழ்வு பெற்று உய்வதைக்கலைகள் பல கழறக்காணலாம். ஒருவன் ஆண்டையாக அதிகாரம் செலுத்தவும் மற்றவன் அடிமையாக அவதிப்படவும் அமைந்த தாயினும் தன்னுயிர்போல் மன்னுயிரைக் கருதிக் காத்தலே மக்கட் பிறவியின் பெரும்பேறும்.

அன்றி, அன்பின் வலிமை சிறப்பதேபோல் அதிகார வலிமை சிறக்கமாட்டா தென்பது திண்ணம். கருணையின் வழிகட்டுண்டார் கருத்து களங்கமின்றிக் காண்பதேபோல் அவரியற்றும் கருமங்களும் போற்றப்படுகின்றன. இதனால் ஏவுவோரும் இயற்றுவோரும் இன்புமடைந்து செயற் கருஞ் செயல்கள் பல சீக்கிரமாயும், சிக்கனமாயும், செம்மையாயும் முடியக் காண

இயற்கைக்கும் அவனுடைய இன்பதுன்பங்களுக்கும் உள்ளசம்பந்தத்தையும் நோயின் பிறப்பையும், அது மனநோய் உடல்நோய் என்று பிரிந்திருப்பதையும் இந்த கட்டுரையில் கூறினோம். அடுத்த கட்டுரையில் உடல் நோய் என்பதைப் பற்றி ஆராய்வோம்.

மதிப்புரை.

'திரவியம் திரட்டும் வழி' அல்லது பெஞ்சமின் பிராங்கலன்:-

சேர்மாதேவி பரத்வாஜாச்ரமம், ஸ்ரீ. ரா. அனந்தகிருஷ்ணன் அவர்களால் எழுதப்பட்டது. இந் நூல் அமெரிக்காவில் அவதரித்த பெரியாராகிய பிராங்கலன் சரித்திரத்தை சுருக்கமாகவும் தெளிவாகவும் கொண்டுள்ளது. வளரும் கொடிக்கு ஒரு கொழுகொம்பு போல இளைஞர்களுக்கு இது இன்றியமையாத துணையாய் நின்று உதவும் பெற்றியுடையது. மிக எளிய நிலைமையிலிருந்து மகோன்னதமான ஸ்தானத்திற்குத் தன் ஒழுக்கத்தாலும் விடா முயற்சியாலும் பிராங்கலன் எழுந்ததை ஆசிரியர் படிப்போர் மனத்தில் பசுமரத் தாணிபோல் பதியும்படி எழுதியுள்ளார். தமிழ்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள் தோறும் ஒவ்வொரு மாணவன் கையிலும் இந் நூல் இருக்க வேண்டியது அவசியம். நூலின் இறுதியில் அரும் பதவுரையும் உள்ளது. 82-பக்கம் (கிரௌன்) கொண்டிருப்பினும் இதன் விலை ரூ 0—6—0 வாகக் குறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. (கிடைக்குமிடம்:- 'கம்ப நாடர்' காரியாலயம். ஆழ்வார்புரம், லாலிரோடு போஸ்ட் கோயமுத்தூர்.)

வேதாந்தபோத சங்கீர்த்தனை:- சாதாரண ஜனங்களும் கற்றறியுமாறு எளிய தமிழில் எழுதப்பட்ட இக்கீர்த்தனைப் புஸ்தகம் ஆசிரியராகிய ஸ்ரீ ஸ்வாமி ராம சர்மா அவர்கள் வேதாந்த தத்துவங்களை எப்படியும் பரவச் செய்யக்கொண்டுள்ள ஆவலின் அறிகுறியாக விளங்குகின்றது. தமிழ்நாட்டின் இளந்தெய்வமாகிய முருகனைப் பற்றிப் பல இனிய கீர்த்தனைகள் இதன் கண் நிரம்பிக் கிடக்கின்றன. விலை ரூ 1—0—0 புஸ்தகம் சற்று உயரிய தாளில் பதிப்பிக்கப்பட்டிருந்தால் சாலச்சிறந்துவிளங்கும்,

"அறிவருள்'மறம்
அன்பொடும், ஊக்கமும், அடக்கம்
பொறை, உறுதி, யோர்பு
இரக்கமும் எளிமையும் புகழும்
மறவி துன்பமும் கூரமும்
மையல் வெறுப் பிகலு
மிறைகள் ஈரொன்ப தோடுமே
மேவின குணத்தில்,"

சுத்த மடைந்த மனம் கடவுளுடன் வசிக்கிறது. அதுவே நமக்குள்ளிருக்கும் கடவுளைக் காட்டும் கண்ணாடி.

மகிழ்விற் படைத்தளித்து மாற்றுங் கடவுள்
யகத்தூய்மை யாலே யறி.

என்றபடி கடவுளை நமது மனத்தூய்மை யாலேயே அறியலாம் இதை யறிந்தன்றோ ஏசுநாதர்,

"வாழிய தூயர் வரதனைக் காண்பர்"

என்று தன் மலைமீ துபதேசத்தில் மாண்புற மொழிந்தார். மனோவாக்கு காயசுத்தி யடைவதே மனிதனுக்கு நிரந்தரமான சுகாதாரம். அந்த சுகாதாரமே மனித வாழ்வை அமரவாழ்வாக்கும். அமரவாழ்வே நமக்குக் கடவுள் தன்மையைத்தரும். கடவுள் தன்மை யடைவதே பேரின்பம். கடவுளுடன் வசிப்பதே பேரானந்தம், அதுவே சுதந்திரநிலை தூல சூக்குமப் பிணிகளறுந்து ஒரே ஆனந்தமயமாக நிலவும் பேரின்பநிலை அதுவே. கடவுளை விட்டுப் பிரியுந் தோறும் நம்மை மாயை பிணிக்கிறது. மனது அழுக்காகிறது. துராசாரம் ஏற்படுகிறது. கடவுளுடன் ஒன்றுந்தோறும் சத்யமும், சாந்தமும், மனதிற் களிப்பும்; உடலில் சுகமும் ஏற்படுகிறது. கவலை நசிக்கிறது. கவலையே நமது பிணிகளுக்குக் காரணம். அது ஆசைவாயிற் பிறந்தது. சஞ்சலத்தில் நம்மைப் புகுத்தி நிலைபெயர்த்து ஆட்டுவிப்பது.

ஆதலின் மனித வாழ்வு அவனுடைய இயற்கையால்த்தான் ஆட்டப்படுகிறது. "தனக்கு அடிமையாவது நரகம், தன்னை யடக்கியாளுவது இன்பம்", "நமக்கு அடங்கிய ஆன்மா பந்து, நம்மை அடிமைப் படுத்திவிடின் சத்ரு." நமது இயற்கையை வளர்ப்பதிலேயே நமக்கு சுக துக்கங்கள் உண்டாகின்றன. தூல சூக்கும இன்ப துன்பங்களே சுகம், நோயெனப்படுவன மனித

"மனஏவ மனுஷ் யாணும்
காரணம் பந்த மோக்ஷயே''

என்பதை அனைவரும் உள்ளத்தில் நாட்டுவோர்களாக. இயற்கையிலேயே மனிதனுக்குப் பல விகாரங்கள் உண்டாகி யுள்ளன.

''பசி, அதிசயமே, யுனனல்,
பயமே,கையுறவு, மூப்பு,
கசிவு நீர் வேட்டல், வேண்டல்,
கத மதங் கேதத்தோடே,

ஒசியு நோய் பிறப்போ
டுவகையே, உறக்கம், இன்பம்.
இசையும் ஈரொன்பான் குற்றம்,
இவை தீர்ந்தோன் இறைவனுமே.''

என்றவாறு மனிதனுக்குப் பதினெட்டுக் குறைகள் ஏற்பட்டுள்ளன. இக்குறைகளை வென்று பூரணத்வம் அடைவதே மனித வாழ்க்கையின் நோக்கம். இவற்றிற்குத் தான் அடிமையாகாது இவற்றை யடக்கி யாளும் மனிதனே மனிதன். இயற்கை மழை நீரைப்போன்று சுத்தமானது. அது செயற்கையின் அன்னை தீமைக்குத் தக்கபடியும் வாசனாத்ரயங்களுக்குத் தக்கபடியும் விகாரமடைகிறது. மனித இயற்கை புத்தர், அப்பர், ஏசுநாதர் போன்றும் நம்மையாக்கும். உரோமாபுரி எரியும்போது பிடில் வாசித்த வன்மனத்தனுகிய நீரோ, ஆயிரக்கணக்கான இளங் குழந்தைகளை வதைத்த ஏரோ, முதலியவர்களைப் போலவும் நம் மையாக்கும். இயற்கையே மனிதன். அது வாழ்க்கை இரதத் தின் பிறவி மனமென்னும் சாரதி. ஒழுங்காக அடக்கி நடத்தி அறவழியில் செலுத்தினுல் நமது வாழ்வு அமரவாழ்வாகும். அப்போது நமது இயற்கை நன் மணத்தையே நாடிச் செல்லும். நமது வாழ்க்கையில் நற்குணங்கள் பிறக்கும். ஐம்புலன்களென் னும், பஞ்சபாண்டவரை வீரப்படுத்தி மனதென்னும் கண்ணன் கௌரவரென்னும் நூறு தீயகுணங்களை வென்று மாயைக்கும் அறிவிற்கும் நடந்த போறில் ஜெயமடைந்ததுபோல தன்னிடத் திலுள்ள நல்ல தீய இயற்கைகளை மனத்திண்மையினுல் மனிதன் வென்று விளங்குவானுக. மனித வியற்கையில் அடியிற்கண்ட குணங்கள் கலந்திருக்கின்றன:—

பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய நாட்டார் மனத்தைப் பற்றிக்கொண்டது. அப் பற்ருல் அவர்கள் இந்தியாவில் குடியேறினர். இந்திய நாடு எளிதாகக் கிடைக்காததால், அது கிடைப்பதற்குத் தடையாயிருந்த பிற ஜாதியார் மீது கோபம் பிறந்தது. கோபத்தால் புத்தி மயக்கம் ஏற்பட்டது. மனித தர்மத்தையே அடியோடு மறந்து வலியோர் மெலியோரை மிருக பலம் கொண்டு நசுக்கத் தொடங்கினர். போரும் சதியாலோசனையும் செய்து இந்தியரை அடிமைப்படுத்தினர். இந்தியா விழித்துக்கொண்டு "நாமிருக்கும் நாடு நமதென்பது அறிந்தோம்" என்று அறிந்து, கிளர்ச்சி செய்யத் தொடங்கியதும் தந்திரத்தால் வென்றவர் சமாதானம் இழந்து அடக்கு முறைகளாலும், முறையில்லா முறைகளாலும் பாரத நாட்டை அடக்க முயலுகின்றனர். சமாதானம் இழந்து மிருக பலத்திற்கு அடிமையானவர்கள் ஆத்ம சக்தி நிறைந்த பாரததேசத்தை அடக்கியாள முடியாதென்பதை வருங்காலம் நன்கு காட்டிவிடும். பொருளைக் கொள்ளை யடிப்பதும், மெலியோரைப் பூண்டறுப்பதுமே கொண்ட நோய் மனத்தாலன்றோ நமதுநாடு பந்தமுற்றுப் பரிதவிக்கிறது. இவ்விதமாக மன நோய் உலகையே நரகமாக்கும்.

மனிதனுடைய இயற்கைக்கு நன்மணமூட்டி பஞ்சேந்திரியக் குதிரைகள் பூட்டிய மனத் தேரை அறவழியில் செலுத்தினுல் மனித வாழ்க்கை சாந்தமுறும். மனிதன் சாந்தமுற்ருல் அவன் மனத்தினின்று சூதும், பொருமையும், வஞ்சகமும், தீமையும் நீங்கும். அவை நீங்கினுல் பரோபகாரமும் அன்பும் பிறக்கும். அன்பு நிறைந்தால் பாரில் அமர் ஒடுங்கும். அன்பும் அமைதியு முள்ள மூளைதான் தெளிவான அறிவுடையதாகும். தெளிவான அறிவால் மனிதன் நன்னெறியில் ஒழுகுகிருன். வாழ்வைப் பரிசுத்தப் படுத்துகிருன் மனமும், உடலும் சொல்லும் பரிசுத்தமாவது தான் பூரண சுகாதாரம். மனச் சுகாதாரமிருந்தால்த்தான் வெளிச் சுகாதாரம் ஏற்படும். காம நோய் பிடித்தவன் தனது இந்திரியங்களை வீணுக்கி வெட்டைக்கு உட்பட்டு இளமையிலேயே கட்டையிலேறுவதை நாம் பார்க்கிருேம். ஆதலின் மனமே நோய்க்குக் காரணம். தூயமனமே சுகத்திற்கும் காரணம்.

குரோதம், லோபம், மதம், மத்சரம், ஈர்ஷை, இடம்பம், அசூயை, தர்ப்பம் முதலிய பத்து வெய்ய நோய்கள் பிறக்கின்றன. அதனுலேதான் நமது திருமூலர் தமது திருமந்திரத்தில்,

ஆசை யறுமின்கள்! ஆசை யறுமின்கள்!
ஈசனே டாயினும் ஆசையறு மின்கள்!
ஆசையுற வுறவாய் வருந்துன்பம்
ஆசையற வற ஆனந்தமாமே!

என்று சொல்லியுள்ளார். மனிதனுடைய மனச்சமாதானங்கெடுவதன் காரணத்தைக் கண்ணன் கீதையில் சங்கிலித் தொடர் போன்ற இரண்டு சுலோகங்களால் சொல்லியிருப்பதைக் காண்போம்:—

"த்யாயதோ விஷயான் பும்ஸ:
ஸங்கஸ்தே ஷூப ஜாயதே
ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:
காமாத் குரோதோபி ஜாயதே

க்ரோதாத் பவதி ஸம்மோஹ;
ஸம்மோஹாத் ஸ்மிருதிவிப்ரம:
ஸ்மிருதிப்ரம்சாத் புத்தி நாசோ
புத்தி நாசாத் ப்ரணச்யதி"

இதன் பொருள்:- "விஷயாதிகளை நினைக்க அவற்றில் பற்றுண்டாகிறது. பற்றினின்று ஆசை பிறக்கிறது. ஆசையினின்று கோபம் உண்டாகிறது. கோபத்தினின்றும மயக்கமுண்டாகிறது. மயக்கத்தால் புத்தி மாறுட்டம் பிறக்கிறது. புத்தி மாறுட்டத்தால் பகுத்தறிவு பாழாகிறது. பகுத்தறிவு பாழானுல் மனிதன் நாசமாகிறான்." தற்போது உலகில் நரகமாக்கும் தீமைகளெல்லாம் வேரூன்றி மனித மரபை யழிப்பது இக்காரணத்தால்த்தான். மேல் நாட்டின் பேராசை நோயால்த்தான் பல சிற்றரசாங்கங்கள் அடிமைவாழ்வு வாழ்கின்றன. உலகில் ஆசை அழுக்காறு இவ்விரண்டினுல்த்தான் போர் விளைகிறது.

'நமக்கு இன்னும் வேண்டும்' என்ற பேராசையாலும், தனக்குக் கிடைக்கவில்லையே என்ற பொறாமையாலுமே உலகில் ஒரு நாட்டை மற்றொரு நாடு தாக்கி உலகம் அமர்க்களமானது. இந்தியா தேசத்தின் வளமும் சீரும் சிறப்பும் ஐரோப்பாவின் ஆசையை இழுத்தது. அந்த ஆசை பேராசையாகி

படுவது. நமது உடலிலுள்ள நீரெல்லாம் சிரங்குகள் மூலம் வெளியேறுகின்றன. நமது உடலிலுள்ள கொதிப்பு காய்ச்சல் மூலம் வெளியேருகிறது. உணவு நெறி தவறுவதனால் பெரும் பான்மையான பிணிகள் வருவதனால், ஜீரணத்திற்கேற்ற தூய உணவை யுட்கொண்டு குடலை சுத்தமாக வைத்துக் கொள்ளுவதே நோயைத்தவிர்க்கும் வழி. உணவின் கேட்டினால்த்தான் நோய் பிறப்பதால் நோயுற்றபோது உபவாசமிருப்பதே சிறந்த மருந்து. உழைப்பவர்களுக்கு விடுதலைபோன்றது உண்பவருக்கு உபவாசம். இக்காலத்தில் முதலாளிகளின் கொடுமைகளை சகியாது தொழிலாளிகள் வேலைநிறுத்தஞ் செய்வதுபோலவே நமது உணவுப் பொறிகளும் நாம் செய்யும் மிகையைச் சகியாது வேலை நிறுத்தஞ்செய்து நமக்குப் புத்தி புகட்டுகின்றன.

நோய் உணவின் நெறிப்பிழையால் மட்டும் உண்டாவதல்ல. மனத்தின் அதிர்ச்சியாலும் நோய் பிறக்கும். நமது சாந்தம் குறையும் போதெல்லாம் நாம் நோய் வாய்ப்படுகிறோம். கோபம் அகங்காரம், வெறுப்பு, பேராசை, பொறாமை முதலிய தீய குணங்களால் நமது மனம் அதிர்ச்சியுறும் போது நமது நரம்புகள் வீணாக அதிக வேலைக்குட்பட்டு தளர்வடைகின்றன. கள் குடித்தவனுக்குப் போதை யேறுவதுபோல கோபங் கொண்டவனுக்கும் புத்தி மாறாட்டம் ஏற்படுகிறது.

தூய மனமும் ஆசாரமுமே சுகத்திற்கு ஆதாரம்; தீய மனமும் துராசாரமுமே நோய்க்கு ஆதாரம்.

"தீய மனத்தாலுந் திறம்பு செயலாலும்
நோய் பிறக்குமென்றே நுவல்"

என்றபடி தீய எண்ணங்களாலும் நெறியில்லாச் செயல்களாலுமே மனிதனுக்கு நோயுண்டாகிறது. வெளி நோயை விட மனநோய் மிகவும் கொடியது. வெளி நோய் உடலை முடக்கும். மனநோய் நமது ஜீவனையே சித்திரவதை செய்துவிடும். ஆசாரக் குறைவால் உடல்நோய் பிறக்கிறது. சாந்தக் குறைவால் உள்நோய் பிறக்கிறது.

நமது ஐம்புலன்களும் நெறிதப்பி மாயையில் மேய்வதனால் பேராசை யுண்டாகிறது. அப்பேராசை யினின்றே காமம்

மிஞ்சி உண்டுவிட்டால் வயிற்றுவலி, வயிற்றலேவு முதலிய நோய்கள் மூலம் இயற்கையன்னை நமக்குப் பாடங்கற்பிப்பதுடன் வயிற்றில் அடைபட்டுக்கிடக்கும் அழுக்குகளை நீக்குகிறாள். காய்ச்சல், சிரங்கு, வயிற்றலேச்சல் முதலியவை யெல்லாம் நாம் செய்த அதிக்ரமங்களுக்குப் பரிகாரமாக இயற்கை கொடுக்கும் தண்டனை யென்பதை நாம் அறியவேண்டும். நாம் செய்யவேண்டிய வேலேக்குத் தேவையான தேகசக்தி நமக்கு உண்டாகும்படி நாம் உண்ணும் பொழுதை அறிவிக்க இயற்கை யன்னை பசியை உண்டுபண்ணுகிறாள். அப்பசிக்குத்தக்கபடி புசிப்பதே மனிதனுக்கு இயற்கையான கட்டளை. சாதம், கறி கூட்டு மட்டும் மனிதனுக்கு உணவல்ல. காற்று, தண்ணீர், வெய்யில் இவையே மனிதனுக்கு முக்கியமான ஜீவாதாரம். இவற்றை உணவென்றே மனிதன் நினைப்பதில்லை. நாவிற்கு அடிமைப்பட்டுக் கண்ட தின்பண்டங்களை வயிறு நிறைய நிறைத்து காற்றிற்கும் புனலுக்கும் இடமில்லாது திணரத் திணரத்தின்று, சூரியவொளியைக் கண்டு அஞ்சி வீட்டிற்குள்ளேயே அடைத்துக் கிடக்கும் கொடிய பழக்கத்தினாலேயே மனிதனுக்கு நோயுண்டாகிறது. இக்கொடிய பழக்கமே தற்கொலையாகிறது. அளவுக்கு மிஞ்சி யுண்பதும் ஆபாசமான காற்றை யுட்கொள்ளுவதும், சுகாதாரத்திற்கு விரோதமாக நெருங்கி வாழ்வதும், வெய்யிலே படாது வீட்டிற்குள் அடைபட்டுக்கிடப்பதும் அழுக்கு நீரை யுண்பதும், அழுக்கு ஆடைகளை யுடுத்துவதும் தேவைக்கு மேலாக நுகர்வதும் இவை யெல்லாம் நமது வாழ்வைத் தற்கொலை செய்து கொள்வதாகும். உண்ணும்போது அரை வயிறுக்கு அன்னமும் கால் வயிறுக்கு நீரும், கால் வயிறுக்குக் காற்றுமாகக் கொள்ள வேண்டுமென்று நமது முன்னோர்கள் காட்டிய நெறியே மேலானது. அஃதன்றி முழுவயிற்றையும் தொந்தி துருத்தும்படி சோறுல் நிறைத்தால் அது பலாத்காரச் செயலாகிறது. இந்த மிருகச் செயலுக்காகவே இயற்கை யன்னை பிணிகளின் மூலம் நமக்கு புத்தி புகட்டி தீமையைப் போக்கிச் செம்மை யுறுத்துகிறாள். இக்கருணையுள்ள செய்கைக்காக நாம் இயற்கையன்னைக்கு வணக்கஞ் செலுத்துகிறோம்.

நாம் நெறிதப்பிப்போகும் போது நமக்கு இயற்கை யன்னை கொடுக்கும் எச்சரிக்கையும் கற்பிக்கும் பாடமுமே நோயெனப்

லாம். இவர்கள் உலகம் போற்ற உயர் குணம் படைத்த உத்தமரென்றும் வழங்கப்படுவர்.

நிற்க சிலர் பூர்வ புண்ணியத்தால் உலகில் உயர் பதவி யடைந்ததும் தன்னய மென்பதைப் பெரிதாய்ப்பேணி, கண்தலை தெரியாமல் கீழுள்ளாரை அதிகார வலிமையால் அடிமையாக்கி, எக்காரியத்தினும் கடுமொழி பேசிக் கண்டித்து வருகின்றனர். அந்தோ! இவர்களிடம் எப்பொழுதும் குற்றங்கூறிக் கோபங்காட்டும் குணமே குடிகொண்டிருப்பதால் கருமங்களனைத்தும் கட்டளையின்றிக் காலாகாலத்தில் நடைபெறுவதுடன், கடன்முறையாகக் களிப்பின்றிச் செய்யப்படுவது நிச்சயம். இதனால் பழியும் பகையும் பெருகுவதன்றி சதாசஞ்சலமே படைத்த மனத்தராய் தரணியில் இகழப் படுவரென்பதைச் சொல்லவும் வேண்டுமோ! இதனை,

“விரிகுழற் பைந்தொடி நாணிவேத் தவையின் முறையிடு
[illegible]ள் வெகுளேமென்று, மரபினுக்கு நமக்கு முலகுள்ளளவுந்
தீராத வசையே கண்டா, யெரிதழற் கானக மகன்றுமின்னமும்
வெம்பகை முடிக்க விளையாநின்று, யரவுயர்த்தோன் கொடுமை
யினுமுரசுயர்த் தோயுன தருளுக்கஞ்சினேனே”

என பீமன் தர்மரின் அருளுக்கு அஞ்சி ஆண்மைக்கு வீரங் காட்டும் வார்த்தையால் உணரலாம்.

இன்னும் விரிக்கிற் பெருகுமாதலின் சிறியேன் பணியைக் கற்றவர் யாவரும் கருத்திலமைத்து அதிகாரம் விடுத்து அன்பையே அணிகலமாக்கி உலகம் புகழ உயர்குணமடைந்து உய்வாராக.

எஸ். அருணாசலம்பிள்ளை, நான்குனேரி.

மனிதனும் இயற்கையும்.

(ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதுவது.)

இயற்கையே உயிர்களை வளர்க்கும் இன்புள்ள அன்னை. இயற்கையே மிகை குறைகளை நீக்கி நடுநிலைப் படுத்தும் நீதியன்னை. இயற்கை வழியில் நிற்றலே விடுதலை. இயற்கையினின்று பிரிவதே பந்தம். இயற்கையின் வழியாகவே உயிர்கள் இயங்குகின்றன. பிணி யென்னும் அடிமைத்தனத்தினின்று நம்மை விடுதலை செய்வது இயற்கையே. நாம் அதிகமாய் அளவுக்கு